## ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு-12-வது அத்தியாயம்.

மகாத்மாகாந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரிதை பின் வருமாறு:—

யுத்த காரியத்திலிருந்து நான் விடுபட்டதும் இனி தென்னாப்பிரிக்காவில் வேலையில்லையென்றும், இந்தியாவிற்கே போய் வேலைசெய்ய வேண்டுமென்றும் நான் அபிப்பிராயப்பட்டேன். தென்னாப்பிரிக்காவில் செய்யக்கூடியது ஒன்றுமில்லை யென்பதில்லை. ஆனால் பணம் சேகரிப்பதைத் தவிர வேறு வேலை எனக்கு அங்கிருக்கவில்லை.

இந்தியாவிலுள்ள எனது நண்பர்களும் திரும்பி வந்து விடும்படி நிர்ப்பந்தப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் நான் அதிக உபயோகமுடையவனாக இருக்கலாமென்று நினைத்தேன். தென்னாப்பிரிக்காவிலுள்ள வேலைகளைக் கவனித்துக்கொள்ள ஸ்ரீமான்களான கானும், மனுசுக்லாலும் இருந்தனர். எனக்கு உத்தரவு கொடுத்து அனுப்பும்படி என்னுடைய சகாக்களை வேண்டிக்கொண்டேன். மிகுந்த கஷ்டப்பட்டுத் தான் ஒரு நிபந்தனைக்குட்பட்டு அவர்களுடைய அனுமதியைப்பெற சாத்தியப்பட்டது. ஒரு வருஷகாலத்திற்குள் அங்குள்ள இந்திய சமூகத்தினர் நான் திரும்பி வரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் நான் அதற்கு இணங்க நடந்துகொள்ள வேண்டுமென்று அவர்கள் நிபந்தனை விதித்தார்கள். அது கஷ்டமான நிபந்தனை யென்பது எனக்குத் தெரிந்து தானிருந்தது. இருந்தபோதிலும் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களிடத்தில் எனக்கு இருந்த அன்பினால் அந்த நிபந்தனைக்கு நான் உடன்பட்டேன். "ஆண்டவன் அன்பென்னும் நூல் பாசத்தினால் என்னைக் கட்டுப்படுத்தி யிருக்கிறானென்றும், நான் அவருக்குக்கட்டுப்பட்ட அடிமை யென்றும்" மீராபாய் சொன்னாள். அது போலவே தென்னாப்பிரிக்கா இந்தியர்களுடன் என்னைப் பிணைத்துப் போட்டிருந்த நூல் பாசமானது அறுத்தெறிய முடியாதபடி அவ்வளவு அழுத்தமானதாக இருந்தது. பொதுஜன வாக்கே தெய்வ வாக்காகும். இங்கு நண்பர்களுடைய வார்த்தைகளை நான் தட்டிவிட முடியவில்லை. அந்த நிபந்தனைக்குட்படச் சம்மதித்து அவர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நேட்டாலிலேயே எனக்கு அதிகப் பழக்கமிருந்து வந்தது. நேட்டால் இந்தியர்கள் என் மீது அன்பு மாரி பொழிந்தார்கள். ஒவ்வொரு இடத்திலும் பிரிவுபசாரக் கூட்டத்தை நடத்தி விலையுயர்ந்த சன்மானங்களை எனக்குக் கொடுத்தார்கள்.

இத்தகைய சன்மானங்கள் 1896-ம் வருஷத்தில் நான் இந்தியாவிற்குத் திரும்பியபோதும் கொடுக்கப்பட்டன. ஆயினும் இந்தத் தடவை அவர்கள் செய்த பிரிவு பசாரமானது எல்லையற்றதாக இருந்தது. தங்கம், வெள்ளி இவைகளில் செய்த சன்மானங்களை எனக்குக் கொடுத்ததுடன், விலையுயர்ந்த வைர நகைகளையும் எனக்குக் கொடுத்தார்கள்.

இந்த சன்மானங்களை ஏற்றுக் கொள்ள எனக்கு உரிமை ஏது? அவைகளை நான் வாங்கிக்கொண்டால் பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராமல் என்னுடைய சமூகத்தினருக்கு நான் சேவை செய்ததாக எவ்விதம் சொல்லிக்கொள்ளமுடியும்? என்னுடைய கட்சிக்காரர்கள் சிலரைத்தவிர மற்றவர்கள் செய்த சன்மானங்கள் என்னுடைய ஊழியத்தை உத்தேசித்தே கொடுக்கப்பட்டன. என்னுடைய கட்சிக்காரர்களும் நான் செய்த பொதுஜன சேவையில் எனக்கு உதவியாக இருந்திருப்பதால் என்னுடைய கட்சிக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் வித்தியாசம் பாராட்ட முடியவில்லை.

ஒரு நகையானது 50 கினி பெறுமான முள்ளதாக இருந்தது. அது என்னுடைய மனைவியை உத்தேசித்துக் கொடுக்கப்பட்டது. ஆயினும் அதுவும் என்னுடைய ஊழியத்தை உத்தேசித்தே கொடுக்கப்பட்டதால் மற்ற சன்மானங்களுக்கும் அதற்கும் நான் வித்தியாசம் பாராட்டமுடியவில்லை.

என்றையதினம் இந்த நகைகள் எனக்கு சன்மானமாகக் கொடுக்கப்பட்டனவோ அன்றிரவு எனக்குத் தூக்கமேவரவில்லை. என்னுடைய அறையில் அங்கும் இங்கும் உலாத்திக்கொண்டு யோசித்தேன். இன்னது செய்வதென்று முடிவு தோன்றவில்லை. நூற்றுக்கணக்காகப் பெறக்கூடிய சன்மானங்களைக் கொடுத்துவிடுவதும் கஷ்டம்; அவைகளை வைத்துக்கொண்டிருப்பதும் கஷ்டம்.

நான் அவைகளை வைத்துக்கொள்ளத் தீர்மானித்துக்கொண்டு விட்டாலும் என்னுடைய குழந்தைகள் சம்மதிக்குமா? எனது மனைவி சம்மதிப்பாளா? அவர்களைப் பொதுஜன சேவையில் நான் ஈடுபடுத்திவிட்டேன். அந்த ஊழியம் செய்யும் பாக்கியமே அதற்குத் தகுந்த சன்மானமென்று அவர்களுக்கு நான் உபதேசித்திருந்தேன். எனனுடைய வீட்டில் விலையுயர்ந்த நகைகளே கிடையாது. எங்களுடைய வாழ்வின் தேவைகளைக் குறைத்துக்கொண்டு வந்துவிட்டோம். அவ்விதமிருக்கையில் எவ்விதம் தங்கக் கெடியாரங்களை வைத்துக்கொள்ள முடியும்? தங்கச் சங்கிலிகளையும், வைர நகைகளையும் எவ்விதம் அணிந்துகொள்ளலாம்? அந்தக் காலத்திலும் நகைப் பைத்தியத்தை விட்டு விடும்படி ஜனங்களுக்கு நான் உபதேசித்து வந்தேன். இப்பொழுது வலுவில் என்னிடம் வந்து சேர்ந்துவிட்ட நகைகளை என்ன செய்வது?

அவைகளை வைத்துக்கொள்ளக் கூடாதென்று நான் தீர்மானம் செய்துகொண்டுவிட்டேன். இந்திய சமூகத்திற்காக அவைகளை ஒரு தர்மச் சொத்தாக வைப்பதாகவும், பார்ஸி ருஸ்டோம்ஜியும் இன்னும் சிலரும் அந்த தர்ம சொத்துக்களுக்கு டிரஸ்டிகளாக இருந்துவர வேண்டுமென்றும் ஒரு கடிதம் எழுதினேன். காலையில் என்னுடைய மனைவியுடனும், குழந்தைகளுடனும் கலந்து பேசி, அந்தப் பெரிய பளுவைக்கழித்துக்கொண்டேன். என்னுடைய மனைவி அதற்காட்சேபம் சொல்லுவாளென்றும், குழந்தைகள் சம்பந்தப்பட்டவரையில் எவ்விதக் கஷ்டமுமேற்படாதென்றும் எனக்குத் தெரியும். என்னுடைய குழந்தைகளை எனக்கு வக்கீல்களாக வைத்துக்கொள்ளுவதென்று நான் முடிவு செய்துகொண்டேன்.

குழந்தைகள் நான் சொன்ன யோசனையை ஒப்புக்கொண்டன. "இந்த விலையுயர்ந்த சாமான்கள் நமக்கு வேண்டியதில்லை. அவைகளை இந்திய சமூகத்தினருக்கே நாம் கொடுத்துவிட வேண்டும். நமக்கு எப்பொழுதேனும் தேவையேற்பட்டால் வாங்கிக் கொள்ளலாம்" என்று குழந்தைகள் சொல்லிவிட்டன.

எனக்கு மிகுந்த சந்தோஷமேற்பட்டது. "அவ்விதமாயின் உங்கள் அம்மாவிடமும் சொல்லி சரிப்படுத்துகிறீர்களா?" வென்று கேட்டேன்.

"அவசியம் செய்கிறோம். அது எங்களுடைய வேலை. எங்கள் அம்மாவிற்கு நகைகள் வேண்டியதில்லை. எங்களை உத்தேசித்துத்தான் அவைகளை வைத்துக்கொள்ள வேண்டுமென்று அவள் சொல்லுவாள். நாங்கள் வேண்டாமென்று சொல்லிவிட்டால் அவளுக்கு என்ன ஆக்ஷேபமிருக்கப் போகிறது?" என்று குழந்தைகள் சொன்னார்கள்.

ஆனால் சொல்லுவது சுலபம்; கிரியாம்சையில் நடப்பது கஷ்டம்.

"உங்களுக்கு நகைகள் வேண்டாமலிருக்கலாம். உங்களுடைய குழந்தைகளுக்கும் நகைகள் வேண்டாமலிருக்கலாம். பயமுறுத்தினால் அவர்கள் நீங்கள் சொல்லுகிறபடி தலையை ஆட்டுவார்கள். நான் அந்த நகைகளைப் போட்டுக் கொள்ளக்கூடாதென்று நீங்கள் சொன்னாலும் அதற்கு அர்த்த முண்டென்று நான் நினைப்பேன். என்னுடைய நாட்டுப் பெண்கள் போகும் கதி யென்ன? அவர்களுக்கு அவசியம் நகைகள் வேண்டியிருக்கும். நாளைக்கு என்ன நடக்கப் போகிறதென்று யாருக்குத் தெரியும்? அன்புடன் ஜனங்கள் கொடுத்த சன்மானங்களைத் திருப்பிக் கொடுத்துவிடுவதற்கு நான் சம்மதிக்க முடியாது" என்று எனது மனைவி சொன்னாள்.

இவ்விதமாக வாதம் நடந்துகொண்டு வந்தது. கடைசியில் அவள் கண்ணீர்விட ஆரம்பித்தாள். இருந்தாலும் குழந்தைகள் பிடிவாதமாக இருந்தன. என்னிடத்திலும் அவளுடைய கட்சி ஏறவில்லை.

"குழந்தைகளுக்கு இன்னும் விவாகமாகவில்லை. பால்யத்தில் அவர்களுக்கு விவாகம்செய்து வைக்க நமக்கு இஷ்டமில்லை. அவர்கள் யுவப்பிராயத்தை அடைந்துவிட்டால் தங்களுடைய காரியத்தைத் தாங்களே பார்த்துக் கொள்ளுவார்கள். நகைகளுக்கு ஆசைப்படுகிற பெண்களை நமது பையன்களுக்கு நாம் விவாகம் செய்துவைக்கப் போவதில்லை. ஒரு வேளை நகைகள் செய்ய வேண்டியிருந்தாலும் நான் இல்லையா? அப்பொழுது என்னைக் கேள்" என்று சாந்தமாக நான் பதில் சொன்னேன்.

"உங்களைக் கேட்கவா? உங்கள்சமாச்சாரம் எனக்குத் தெரியாதா? என்னுடைய நகைகளை நீங்கள் ஒழித்தீர்கள். நகைகளைப் போட்டுக்கொண்டு நான் வாழ உங்களுக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் நாட்டுப் பெண்களுக்கு நகை செய்து கொடுக்கப் போகிறீர்களா? இப்பொழுது முதலே என்னுடைய குழந்தைகளை நீங்கள் பரதேசிகளாக்கி வருகிறீர்கள்! முடியாது; நகைகளைக் கொடுக்க முடியாது. என்னுடைய சங்கிலியைக்கேட்க உங்களுக்கென்ன சுதந்திரமிருக்கிறது" என்று சொன்னாள்.

"கழுத்துச் சங்கிலி என்னுடைய ஊழியத்திற்காகக் கொடுத்ததா, உன்னுடைய ஊழியத்திற்காகக் கொடுத்ததா?" வென்று நான் கேட்டேன்.

"அது வாஸ்தவந்தான். உங்களை உத்தேசித்துத்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் நீங்கள் செய்த ஊழியம் நான் செய்தது மாதிரிதான். நான் உங்களுக்காக இரவு பகலின்றி உழைத்திருக்கிறேன். அது ஊழியமல்லவா? வருகிறவர்கள் போகிறவர்களை எல்லாம் இங்கு கூட்டிக்கொண்டு வந்து சேர்த்தீர்கள். அவர்களுக்கெல்லாம் நான் உழைத்துக் கொட்ட வேண்டியிருந்தது" என்று அவள் பதில் சொன்னாள்.

இந்த வார்த்தைகள் சுருக்கென்று தான் என் மனதில் பாய்ந்தன. இருந்தாலும் நகைகளைத் திருப்பிக்கொடுத்து விடுவதென நான் முடிவுசெய்துகொண்டுவிட்டேன். எவ்விதமோ அதற்கு என்மனைவி சம்மதி கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்து விட்டேன். 1896-லும், 1901-லும் கிடைத்த சன்மானங்களைத் திருப்பிக்கொடுத்துவிட்டேன். ஒரு டிரஸ்டுப் பத்திரம் எழுதி அதையும் சொத்துக்களையும் ஒரு பாங்கில் ஒப்புவித்து, இந்திய சமூகத்தினரை உத்தேசித்து நானாவது, டிரஸ்டிகளாவது விரும்புகிறபடி அதைச் செலவு செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்தேன். பொதுக் காரியத்திற்காக எனக்குப் பணம் தேவையாகவிருந்து, அந்த நிதியிலிருந்து வாங்கிக் கொள்ளுவதென்று நான் நினைத்தபொழுதெல்லாம், வேண்டிய பணத்தை முதலில் கை வைக்காமலே நான் அடைந்திருக்கிறேன். இப்பொழுதும் அந்த நிதி சமயத்திற்கு உதவி வருகிறது. அது ஏராளமாகக் குவிந்திருக்கிறது.

இவ்விதம் செய்து விட்டதற்கு நான் எக்காலத்திலும் வருத்தப்பட்டதில்லை. எனது மனைவியும் நாளடைவில் நான் செய்தது புத்திசாலித்தனமென்பதை உணர்ந்து கொண்டாள். பல தூண்டுதல்களிலிருந்து இந்த ஏற்பாடு எங்களைக் காப்பாற்றிவிட்டிருக்கிறது. பொதுஜன ஊழியர்கள் விலை மதிப்புள்ள சன்மானங்களைப் பெறக்கூடாதென்பதே என்னுடைய அபிப்பிராயம்.

## புலனடக்கம்.

(முன் தொடர்ச்சி.)

மனிதன் உயிர் வாழ்வதற்கு வெறும் சோளமை ரொட்டியோ, பருப்பும் சோறுமோ, கம்பங்கூழோ முற்றும் போதுமானது. இவற்றுள் ஏதேனும் ஒன்று அவசியமானது. இத்தகைய எளிய உணவை அருந்திக் கோடிக்கணக்கான மக்கள் உயிர் வாழ்ந்தே வருகிறார்கள். ஆனால் ரொட்டியைக் கொஞ்சம் வெண்ணெயுடனும் காரமான கறிவகையுடனும் தின்றால் நாவுக்குச் சுவையாயிருக்கும் கொஞ்சம் புலால் இருந்தால் இன்னும் நல்லது. கறி, புலால் இவைகளுடன் வாசனைக்குக் கடுகு முதலிய தாளிதம் சேர்ந்திருந்தால் இன்னும் மேல். பின்னர் குடிப்பதற்குக் கொஞ்சம் திராட்சை ரசம்—அதிலும் சிகப்பான திராட்சை ரசம் இருந்தால் வேண்டாமென்று சொல்வாரில்லை! இனிமேல் வயிறு கொள்ளாதாயினும், மீன்கள் நன்றாகப் பாகம் செய்யப்பட்டிருந்தால் ஏதோ முயற்சி செய்யலாம்! சாப்பாட்டுக்குப் பின்னர் இனிப்பான தின்பண்டங்கள், பஞ்சாமிருதம் முதலியவை. கிடைத்தால் சுவ்வை முன்னிட்டுக் கொஞ்சம் அருந்தலாம்! [அரிசிச் சோறு தின்பவர்கள் விஷயமும் இப்படித்தான்: நெய், இரண்டு மூன்று வகைக் கறிகள், பச்சடிகள், காரமான ஊறுகாய்கள், சாம்பார், ரசம், வடை, லட்டு, பாயசம்!] சாப்பாட்டின் சுவையைப்பெருக்கச் செய்ய இன்னும் எவ்வளவோ அபிவிருத்திகள் செய்யலாம். இவ்வாறு வயிறு புடைக்கத் தின்பவர்கள் தாங்கள் சன்மார்க்க வாழ்வு நடத்துவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆச்சரியம்! ஆச்சரியம்!!

• * •

நல்வாழ்வுக் கு உபவாசம் இன்றியமையாததொரு நிபந்தனையாகும். ஆனால் உபவாசத்திலும், எங்கே தொடங்குவது என்னும் வினா எழுகின்றது. உபவாசமாம்! அதில் எங்கே தொடங்குவதென்னும் வினாவாம்! என்ன விந்தை! என்று மக்களில் பெரும்பான்மையோர் நகையாடுகிறார்கள். சில தினங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதப் பிரசாரகர் ஒருவரின் உபந்நியாசத்தை நான் கேட்க நேர்ந்தது. துறவறத்தைக் கண்டித்து வந்த அப்பிரசாரகர் "எங்கள் கிறிஸ்தவ மதம் பட்டினிகிடக்கும் மதமன்று. அது மாட்டிறைச்சி மதம்!" என்று பெருமையுடன் கூறிக்கொண்டார். கிறிஸ்தவ மதத்துக்கும் மாட்டிறைச்சிக்கும் எத்தனை நெருங்கிய சம்பந்தம்! அந்தோ! தற்காலத்தில் நமது மக்களின் மனம் எப்படி மாறிவிட்டது! மதத்தையும், மாட்டிறைச்சியையும் ஒரே மூச்சில் சொல்வதிலுள்ள ஆபாசம் நமக்குப் புலனாவதில்லை. நம் கண்கள் திறந்திருந்தும் நாம் பார்ப்பதில்லை. செவிகளிருந்தும் நாம் கேட்பதில்லை. எத்தகைய துர் நாற்றமாயினும், கொஞ்சத்தமாயினும், வேறு அகோரக் காட்சியாயினும்மனிதனுக்கு நாளடைவில் பழக்கமாகி விடுகின்றன. பழக்கமில்லாத மனிதன் அருவருப்படைவதுபோல் அவர்கள் அருவருப்படைவதில்லை. ஒழுக்கத் துறையிலும், சமயத் துறையிலும் இவ்வாறு தான் நமக்கு ஆபாசங்கள் வழக்கமாகி விட்டன.

• *

சமீபத்தில் ஒரு நாள் சாலையில் நடந்து கொண்டிருந்த போது மாடடிக்கும் தொழிலாளி ஒருவனைச் சந்தித்தேன். அவன் தினந்தோறும் கொல்லும் பிராணிகளுக்காக அவன் வருத்தப்படவில்லையா வென்று கேட்டேன். "நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? அவசியமான காரியத்தைத் தானே செய்கிறேன்?" என்று அவன் கூறினான். புலால் தின்னுதல் உயிர் வாழ்வதற்கு அவசியமன்றென்று நான் எடுத்துக் காட்டியபோது, அவன் ஒப்புக் கொண்டு, தான் கொலை செய்யும் பிராணிகளுக்காக வருந்துவதாய்க் கூறினான். "ஆனால் நான் என் செய்வேன்? என் வயிற்றுப் பிழைப்புக்காகக் கொன்று தான் ஆக வேண்டும். முதலில் எனக்குப் பரிதாப்பாயிருந்தது. பய

(இதன் தொடர்பு 7-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சமய வுதவி.

"பொருளிலார்க் கிவ்வுலகமில்" என்பது ஆன்றோர் வாக்கு. உலகில் தோன்றிய பலவகை ஜென்மங்களும் தத்தம் ஜீவனோபாயத்திற்காகத் தினம் தினம் உழைத்து வருதல் யாவருமறிந்த விஷயமாகும். எறும்பு மாரிகாலத்திற்கு வேண்டிய தன் உணவை கோடை காலத்தே சேகரித்து வைத்துக் கொள்கிறது. குருவி தான் ஒரு வருடம் வாழத்தக்க கூடுகட்டிக் கொள்கிறது. இவ்வண்ணமே நீர்வாழ் ஜெந்துக்களும் தமது பிற்கிய வாழ்விற்கு முந்தியே தயார் செய்கின்றன. இஃதிவ்வாறிருக்க இன்றமையின் மக்கள் ஜென்ன மெடுத்த இம்மானிட வர்க்கத்தினரின் நிலைமையைக் கவனிப்போமாயின், நம் நாட்டினில அன்றன்றைக்கு உரிய ஜீவ ஆதாரத்தைச் சம்பாதித்து வாழ்வார் ஒரு சாரார். சொற்ப நிலஸ்திதியை வகித்து, பூதேவி யருளால் பிழைப்பவர் ஒரு சாரார். அரசியல் பதவிகள் வகித்து வாழ்வார் ஒரு சாரார். வக்கீல், கம்பேனி, புரோக்கர், வைத்தியர், வாணிபம், யாத்திரீகம், சிற்பம் முதலிய வித்தைகளில் வல்லுனராய் உயிர் வாழ்வார் சில சாரார். இவ்விதம் பல வேறு வகைப்பட்டாரும் தத்தம் கிரிகையின் மூலமாகச் சம்பாதித்துச் சீவிக்க வேண்டும்.

மேற் கூறிய பல்வகைப்பட்டாரும் தத்தம் குறைகளை நிவர்த்தி செய்து நிறைபெற்று வருவதற்கு ஆதாரமாயிருப்பது எது?

சொற்பச் சம்பளத்திலிருந்த தபால் இலாக்காக் குமஸ்தாக்கட்கு, உயர்ந்த சம்பளம் பெற ஆதாரமாக இருந்தது எது? கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளம் பதினைந்து ரூபாயாகச் செய்தது யாது? யாவும் பத்திரிகைகள் அன்றோ! ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளை பொது ஜன முன் கொண்டு வந்து, குறை நிவர்த்தி செய்யச் சாதகமானது பத்திரிகை யன்றோ! உலகின் பல் வேறு பாகங்களில நடக்கும் விஷயங்களையும், காலத்தின் அனுகூலத்தையும கற்பிப்பது பத்திரிகை யன்றோ!

இதுகாறும் வஞ்சகமாக நமக்கு இருட்டு உபதேசஞ் செய்து வந்த பிறமணர்களின் கபட நாடகத்தை வெளிப்படுத்தி, நம்மன தீபத்தை ஒளியச் செய்தது எது? பத்திரிகையன்றோ! அநநிய ஆட்சியின் கொடுமையையும், அடிமைக்கு யாதொரு விதமான சுகமுமிலையாது என்னும் எண்ணத்தையும் நம்முன் பலப்படுத்தியது எது? பத்திரிகை அன்றோ!

இதுபோன்றே நம் பரத கண்டத்து காரணமின்றி நிலவி வரும் பல் வேறு ஜாதிப் பிரிவுகளுள் ஒவ்வொன்றும் தன் தன் முன்னேற்றத்திற்காக, ஜாதிப் பெயரை நாமமாகக் கொண்ட பத்திரிகைகளை நடத்தி, தத்தம் ஜாதியில் உள்ளாரை ஆசாரம், ஒழுக்கம், வழக்கங்களில் திருத்த முயற்சிக்கின்றது. அந்நிலையைக் கொண்டே 1302000 ஜனத் தொகையைக் கொண்ட நம் நாடார் குலத்தின் அபிவிருத்தியைக் கருதி ஆரம்பிக்கப் பெற்றதாகும் நம் "நாடார்குல மித்திரன்". நம ஜாதியில் ஒடுக்கப்பட்டாருக்கும் இடுக்கண் உற்றாருக்கும் மித்திரன் சங்க மூலமாகச் செய்து வந்திருக்கும் விஷயங்களைக் கூறிக் கொண்டிருக்க ஆரம்பித்தால் பெரும் புராணமாகிவிடும். ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு நாடார்களையும் வீடு வந்து தரிசிக்கும் இம் மித்திரனுக்கு என்ன உபகாரஞ் செய்கிறீர்கள்? சற்று சிந்திக்க.

உரமிருந்தாலே மரம் வளரும். திடம் இருந்தால் தேகம் வேலை செய்யும். முதல் இருந்தாலே தொழில் நடைபெறும். ஆனபடியின் நம்குலத்தினுள்ள ஒவ்வொரு தோன்றலும் மித்திரன் வளர்ச்சிக்கு உதவி செய்ய வேண்டியதிருக்கிறது. மித்திரன் யாவருக்கும் மித்திரன். ஒருவருக்கு மட்டும் மித்திரனாயிருப்பின், தற்சார்பு தெரியும். பலருக்கும் மித்திரனானபடியால், பலரும் மித்திரனபிவிருத்தியில் ஈடுபட வேண்டியதிருக்கிறது. நமது கடமை அதுவன்றி வேறெது

## ஜஸ்டிஸ் தினக்கொண்டாட்டம்.

### நாடார்களும் கோயிலும்.

26-2-27ல் திருவாரூர் திராவிடச் சங்கக் கட்டடத்தில் ஓர் பொதுக்கூட்டம் கூடி ஜஸ்டிஸ் திருநாள்கொண்டாட்ட மொன்று மாலை 5½ மணிக்கு மாஜி நகரசபை சேர்மன் ஸ்ரீமான் சுப்பராயலு நாயுடு கார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

சில பிரமுகர்கள் அன்று கூடிய அவசியத்தையும் சங்க நோக்கத்தையும் எடுத்துரைத்தனர். இவ்வூர் ஸ்ரீமான் க. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் (காங்கிரஸ்வாதி) இச்சங்கத்தின் நோக்கத்தை ஒருவாறு வற்றுப் பேசியதாவது:—தாழ்த்தப்பட்ட பிராமணரல்லாத மக்களை உயர்வுபடுத்தி சமத்துவம் அடைய விரும்புவதாக இருந்தால் நம்முடன் பல விஷயங்களிலும் சமத்துவமடைந்த நாடார்களுக்கு கோவில்களில் ஏன் பிரவேச உரிமையளிக்கப் படாதென்று கேட்டார். மாஜி முனிஸிபல் கௌவுன்ஸிலர் ஸ்ரீமான் உத்திராபதி பிள்ளை அவர்கள் பதிலளிக்கையில் "சில இடங்களில் அதிலும் தென் தேசத்தில் தான் அவ்வுரிமை கிடையாதெனத் தெரிகிறது. மதுரையில் கூடிய ஜஸ்டிஸ் மகாநாட்டிலும் நாடார்கள் கோவிலுக்குட் போகும் உரிமை அளிக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். இவ்வூரில் அத்துவேஷமே கிடையாது. நாடார்களின் பேரில் அப்படி துவேஷமிருக்குமானல் (அம் மகாநாட்டில் வீற்றிருந்த ஓர் கனவானை சுட்டிக்காட்டி) இவர் நம் பெரிய கோவில் அதிகாரி. நான் சொன்னதில் ஆக்ஷேபமிருக்குமானல் மறுக்கட்டுமென்றார்". ஆக்ஷேபிக்கவில்லை; அங்கீகரிக்கப் பெற்றது. இச்சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் ராமன் பிள்ளை அவர்கள் இவ்வூர் பெரிய கோவிலில் கொஞ்சம் துவேஷமிருப்பதாகத் தெரிகிறபடியால் இவ்வூர் நாடார் சங்கத்தவர்களும நாமும சேர்ந்துபோகும் தினத்தைத் தீர்மானங்களின் மூலமாய்க் குறிப்பிட்டு பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தி ஆலயத்தில் பிரவேசிக்கலாமென்று பேசினர்.

ஸ்ரீமான் நடேச ஆச்சாரி அவர்கள் பதிலளிக்கையில் நாடார்களைப்பற்றிய ஆக்ஷேபனைகள் நமதூர் கோவிலில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனதினல் இம்மகாநாட்டில் ஒருவரேனும் ஆக்ஷேபிக்காதநிலையிலும் ஸ்ரீமான் ராமன் பிள்ளை அவர்கள் சொல்லியபடி வெளிப்பிரகடனம் ஒன்று செய்யவேண்டியது அவசியம். இல்லை இவ்வகைக்கு முயற்சிக்கும் நாடார்களை யாரேனும் தடுத்தால் அச்சமயம் நாம் நாடார்களுக்கு எல்லா விதத்தாலும் உதவிபுரிவோம் என்று பேசி முடித்தார்.

தலைவர், பலரும் பேசிய சாராம்சங்களைத் தன் முடிவுரையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்து வந்தனத்துடன் கூட்டத்தைக் கலைத்தார் என்று ஸ்ரீமான் வெ. சாமிநாத நாடார் எழுதுகின்றார்.

---

வும் அன்று! எவ்விதத்தில் உதவலாம் எனச் சிலர்க்குயோசனை நிகழும். தற்சமயம் உதவ வேண்டியது எவ்வண்ணம் எனின், மித்திரனின் அஸ்தி பாரத்தைப் பலப்படுத்த எண்ணி, நம்மால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் லாட்டரியில் சான்றோர் ஒவ்வொருவரும் கலந்துகொள்வதே. இருமாதத்தில் நடைபெற விருக்கும் லாட்டரியில் ஊதியமும் அடையவே, நண்பனுக்குதவி செய்த புண்ணியத்தையும் பெறுகிறோம்.

மித்திரனும் இதைவிட மிகுந்த துரிதமாக நம்மிடம் வந்து, அநேக விஷயங்களைப் பேசிவர ஏதுவாகும். உங்களின் பதிற் கடிதத்தையும் எதிர்பாராது மித்திரன் வலிய வந்து வாசல் தட்டுவான். இவ்விதபாக்கியம் கிட்டுகின்றமையின், ஊதியத்தையும், புண்ணியத்தையும், நன்மையையும் கருதி சான்றோர் யாவரும் லாட்டரியில் கலந்துழைக்க வேண்டுகிறோம்.

குரு உபதேசம்.

## கடிதங்கள்.

### கடவுளின் கருணைநோக்கு.

நாடார் நன்மக்களே!

கால மாறுதலுக்கேற்ப சமீபகாலமாய் இரண்டொரு ஜில்லாக்களில் ஆலய சுதந்திரத்தை நாம் வன்கண்மையாகப் பிறரால் இழக்கப் பெற்றும், நமதுகையே நமக்குதவி யெனும் சிறந்த கொள்கையுற்றி நம்மில் பெரியோர் பலர் பின்னிட்டு முன்னின்று தனியாக பல ஆலயங்களை நிர்மாணித்து ஆண்டவனை வழுத்தி வருகிறோமென்பது உலகறிந்த தொன்று. பெரியோர்களின் வழி நேர்மைக்கும் அவ்வகையில் அன்பர்கள் செலுத்திய அன்புகசிந்த பக்தி மேலீடுதலுக்கு மிரங்கி 18 ஆண்டுகட்கு முன்னர் திருவண்ணாமலைத் தீபத்தான் தாம்பிரவர்ணி தீரத்தில் ஏரல் மாநகரில் திருவவதாரம் புரிந்து நம்மவர்க்கும் ஏனையர்க்கும் காட்சியளித்ததையும் நாம் அறிவோம். அவ்வாறே கண்கண்டதெய்வமாம் அவ்வாண்டவனை வேண்டி இதம் பெறுவார் நாளதும் கணக்கிலடங்கா. ஆகையால் இவ்வகைச் சிறப்பு நமக்கிருக்க நம்மை மதியாவிடத்திற்கு மார்பு தட்டுவதின் மதியென்னே! நாமிழந்த சுதந்திரமனைத்துங் கிடைக்கும் காலம் அவனருளால் சமீபித்து நிற்கிறது. ஆவதும் அழிவதும் இன்னருள் பாலிப்பதும் அவனேயாமே எனக் கொண்டு குலதெய்வமாம் ஸ்ரீ அருணாசலேஸ்பரரே தஞ்சமென்றஞ்சலி செய்வோமாக.

கோ. சி. பச்சையநாடார்,
தூத்துக்குடி.

### ஸ்காலர்ஷிப் நிதி.

நாடார் மகாஜன சங்கம் ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் நிதியை அபிவிருத்தி செயும் வழி வகை கோலுதற்கு மதுரை எட்வர்ட் ஹாலில் கூடிய அங்கத்தினர் கூட்டத்தில், தீர்மானிக்கப் பெற்ற பூராத் தொகைக்கும் சொத்து வாங்க வேண்டுமென்பதானது நாடார் மக்கள் அனைவோருடைய மனதிற் கியைந்ததாக தென்றும், தீர்மானம் சம்பிரதாயமான வழியில் நிறைவேற்றப்பெற்றிருப்பினும், சரியான பிரதிநிதிகளுடன் கூட்டம் நடைபெறவில்லை யென்றும், "நாடார் பாங்கு" விஷயத்தில் சற்றும் பரிவு காட்டாதது நேர்மையுடைத்தல்லவென்றும், பலரையும் ஆதரிக்கும் குணம் எவ்வளவு சீரிய கொள்கை யென்பதை யோராது போனது வருந்தத்தக்க தென்றும் குறைகூறி நீண்ட நிருபமொன்று பாளையங்கோட்டை ஸ்ரீமான் மயிலேறி பி. விசுவாச நாடார் எழுதியிருக்கிறார்கள்.

### பிராமணரல்லாதார் முற்போக்கு.

2—3—27-ல் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் முன்பாக பிராமணரல்லாதார் கூட்டமொன்று கூடியது. ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள் பிராமணீயத்தை ஒழிக்கும் வகைபற்றி நீண்டதோர் சொன்மாரி பொழிந்தார். அவ்வமயம் கல்வியிலும், ஆசாரத்திலும், தொழிலிலும், சுதந்திரத்திலும் இந்நாள்வரை முட்டுற்றுக் கிடந்ததற்குக் காரணமாயிருந்த பிராமணீயக் கட்டுகளினின்றும் விடுபட்டு சுயமதி பெற்றிட்டு நாயன் பதம் பெற நட்டுவன் இல் தட்டு இல எனும் தெட்டு ஜனங்கள் யாவரிடத்தும் மிளிர்ந்தது என்று ஸ்ரீமான் எம். டி. பாண்டியன் எழுதுகிறார்.

### தஞ்சை ஜில்லா போர்டுக்கு முகமதியப் பிரதிநிதி.

தஞ்சை ஜில்லா போர்டில் காலியாயிருக்கும் முகமதியர் ஸ்தானத்திற்கு அதிராம்பட்டணவாசியும், இனாம்தாரும், மிராஸ்தாரும், கிராமமுன்சீபும், பெருந் தனவானும், இனவானும், மனவானும், குணவானுமான ஜனாப் லெ. மு. செ. முகம்மது செயினுத் தம்பி மரைக்காயரவர்களை நியமிக்க வேணுமாய் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்வதாக அதிராம் பட்டண பல ஜாதி மதத்தினரும் கேட்டுக்கொள்வதாக ஐவர் நிருபமொன்றை அனுப்பியுள்ளார்கள்.

## இலங்கை.

### சூதாட்டக் குழப்பம்.

வெள்ளிக்கடா என்ற கிராமத்தில் சூதாட்டம் சிலர் ஆடும்போது குழப்பம் நேர்ந்து கத்திப் பிரயோகத்தில் முடிந்தது. அடிதடிகளும் சர்வ சாதாரணமாயிருந்ததாம். காயம்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டனர்.

### நாய் கடித்ததாக வழக்கு.

கொட்டாஞ்சேனை மிஸ்டர் ஜெ. பி. விஸவாகுல என்பாரினுடைய குழந்தையை அண்டை வீட்டுக்காரனுடைய நாய் பல விடங்களிலும் கடித்துவிட்டதால், நாயின் சொந்தக்காரனகிய கனகரத்தினம் என்பாரை மூர்க்கமுள்ள நாயைக் கட்டுப்பாடாய் வைத்திருக்காததற்காக குற்றஞ் சாட்டியிருக்கிறது. சமனும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

### ரயில் வண்டியை கவிழ்க்கச் சூழ்ச்சி.

கொள்பெட்டி இரயில் தண்டவாளத்தில் இரும்புத் தடியைப் போட்டு ரெயிலைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்ததாக அப்துல்ஹமீது என்பவர் விசாரிக்கப்பட்டு ஒரு மாதம் கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்.

### மதம் பிடித்த யானை.

கண்டி மிஸ்டர் ஆர். இ. எல். டி. சொய்ஸாவிற்கு சொந்தமான ஒரு யானை மதம்பிடித்து ஊரில் மரங்களைச் சாய்த்தும், ஜனங்களுக்கு கஷ்ட நஷ்டங்களை விளைத்தும் வந்தது. பின் அரியகுணசேகரர் என்பவரால் யானை பிடிக்கப்பட்டதாம்.

### ஹோட்டலில் நெருப்பு.

கண்டி வார்டு வீதியிலுள்ள புஹாரி ஹோட்டலில் தீப் பற்றி ரூபாய் 2000 வரை சேதமாய்விட்டது. நெருப்பணைக்கும் கம்பெனியின் உதவி கொண்டும், கவர்ன்மெண்டு போலீஸார் உதவி கொண்டும் நெருப்பு அணைக்கப்பட்டது.

### மாத்தளையில் மாரியம்மன்.

மாத்தளை மாரியம்மன் இரதோற்சவம் 17—2—27-ல் நடைபெற்றதில் அங்குள்ள இந்தியருக்கும், யாழ்ப்பாணத் தவர்களுக்கும் யாருக்கு முந்திய மரியாதை என்பதில் வழக்கு நேர்ந்தது. போலீஸ் எவ்வளவோ கலகத்தை ஒடுக்கிப்பார்த்தும் தீராததால் இரதம் வந்த வழியே திருப்பி இருப்பிடம் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டதாம். அம்பாளின் அன்பராவது அன்புகசிந்த உளங்கொண்டா அல்லது முதல் மரியாதை பெறுவது கொண்டா என்பது தெரியாது போன அவ்விடத்திய இந்துக்களின் நேர்மைதான் என்னே!

---

இந்தியாவில் 2316 பட்டணங்களும், 685665 கிராமங்களும் இருக்கின்றன. பட்டணங்களில் 33475276 ஜனங்களும், கிராமங்களில் 286476205 ஜனங்களும் வசிக்கின்றனர். ஒரு நாளைக்கு அமெரிக்காவில் ரூபாய் 3 ம், ஆஸ்திரேலியாவில் ரூ 2—4—0 ம், இங்கிலாந்தில் ரூ 2 ம், கானடாவில் ரூ 1—12—0 ம், இந்தியாவில் ரூபாய் 0—1—7 ம் ஜனங்களின் வருமானமாயிருக்கிறது.

---

இரங்கூனில் 7 உ இரு சட்டைக்காரர்கள் ஒரு ரிக்ஷா வண்டியில் ஏறிக்கொண்டு வேகமாய் இழுத்துப் போகும்படி உத்தரவிட்டனராம். பாவம் ரிக்ஷா வண்டிக்காரச் சிறுவன் கஷ்டப்பட்டும், அவர்கள் விரும்பியவாறு அதிகத் தொலை வேகமாய்ச் செல்ல முடியாது தயங்குங்கால் அத்தடியர்கள் பையனை நையப்புடைத்து உயிர்க்கே ஆபத்தைத் தேடி விட்டனராம். என்னே மதி!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்குலமித்திரன்.

அக்ஷய ௵ பங்குனி மீ ௧ உ


## சுய மரியாதை.

தே சுய மரியாதை யென்பது தான் கருதலையாக விருந்தாலும் தானே சகலருக்கும் பெரியவனாயிருந்து தன்னைச் சகலரும் வணங்க தான் வாழ்வதே சுய மரியாதையாகுமென்று கருதுவார் பலருளர். யாவருக்கும் தொண்டனாய் சர்வான்ம ஊழியமே தந்தொழிலாய்த் தாழ்ந்து தன்னையறிந்து தனக்குத்தானே மரியாதையாக நடந்து கொள்வதே சுயமரியாதையெனக் கருதுவாருமுண்டு. ஒருவருக்கொருவர் கேவலம் மிருகங்களையொப்ப அடிமை வாழ்க்கையிலிருந்து விடுபடுவதும், அடக்கிவைக்கப்பெற்றிருக்குங் கட்டை விட்டெழும்புவதுமே உண்மைச் சுய மரியாதையாகும் என்பாருமுளர். எது உண்மையான சுயமரியாதையோ அதை அடைய எல்லோருக்கும் ஆவலுண்டாவது சகசம். அதை அடைய வேண்டியதும் கடமையாம்.

தற்போது சுயமரியாதையிலதேல் சுயராஜ்யமில்லை யென்றும், சுயராஜ்யம் வந்தால் சுயமரியாதையுமுண்டாகுமென்றும் படித்தவர்களின் வாதத்திலிருந்து வருகிறது. சுயராஜ்யமுள்ள பல தேசங்களில் சுயமரியாதையின்றிப் பல ஜனங்கள் திண்டாடிக்கொண்டிருக்கும்போது சுயமரியாதையே அற்ற நம் நாட்டிற்கு சுயராஜ்யம் வந்தால் சுயமரியாதை எங்ஙனமுண்டாகுமென்பது தான் கேள்வி. சுயமரியாதையற்ற ஜனங்களால் சுயராஜ்யம் அடையமுடியாது ஆதலால் முதலாவது சுயமரியாதையடைவதே முதற்கடமையாகுமென்று காங்கிரஸிலிருந்த பல தேசாபிமானிகள் சுயமரியாதைக்காக பாடுபட்டுவருகிறார்கள். இதில் பிராமணர்களின் கொடுமையிலிருந்து விடுபடுவதே சுயமரியாதையென்று ஒரு சிலரும், பிராமணரல்லாதாருக்குள்ளிருக்கும் பேதாபேதங்களை நீக்குவதே சுயமரியாதையாகுமென்று மற்றோர் சாராரும் கருதுகின்றனர். கொடுமையை யார் செய்தாலும் கொடுமைதான்; ஆகையால் சர்வ கொடுமைகளையும் சாம்பலாக்க வேண்டியதவசியமே.

வைக்கம் வீரர் ஈரோடு ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்கள் இருதயத்தில் சுயமரியாதையென்னும் பயிர் வேரூன்றி எங்கும் படர்ந்து விரிந்து மலர்ந்து வருகின்றது. அக்கொடி தென்னாட்டிலும் சிறிது படரத்தலைப்பட்டிருப்பதும், அரசியல் மோகங்கொண்ட பல தலைவர்களையும் தம்வசப்படுத்தியிருப்பதும் நற்சகுனமேயாம். சமீபத்தில் திருநெல்வேலியில் ஸ்ரீமான்கள் பணகால்ராஜா, [illegible]ரெட்டியார், குமாரசாமி ரெட்டியார், மதுரை சுப்பிரமணிய முதலியார், பிரபல தளவாய் முதலியார் முதலான சகல தேசபக்தர்களையும் சுயமரியாதைத் தெய்வம் ஒன்றுகூட்டியது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமான் ஈ. வி. நாயக்கருடைய சக்தி நமது நாட்டையே ஒன்றுசேர்த்து விடுமென்று நம்புகிறோம்.

பிராமணரல்லாதார் பெருநோக்கமும் சுயமரியாதையைக் காப்பாற்றவே ஏற்பட்டது. ஆரம்பத்தில் நல்ல வேலை செய்ததென்றாலும் நாளடைவில் பட்டம் பதவி மயக்கத்தில் மூழ்கிக்கிடந்த ஒரு காரணத்தால் நடந்த தேர்தலில் தோல்வி ஏற்பட்டுவிட்டது. தோல்வி ஏற்பட்ட பிறகாவது மாபெருந்தலைவர்கள் கதரை யாதரிக்கவும் கள்ளை நிறுத்தவும் சுயமரியாதையைக் காப்பாற்றவும் முன்வந்ததை மிகவும் பாராட்டுகின்றோம். சுயமரியாதைப் போருக்கு ஸ்ரீமான் நாயக்கரே சேனாதிபதியாயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதும், அவர்கூறும் வார்த்தைப்படி நடப்பதாக இணங்குவதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அவர்கள் தாங்களடைந்த தோல்வியைத் தேற்றுவதற்காக இறங்கிவந்திருக்கிறார்களா, உண்மையில் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காக வருகிறார்களா வென்பதை ஸ்ரீமான் நாயக்கர் சோதித்துப் பார்த்துவிட வேண்டும். சுயமரியாதைக் கொடியைத் தூக்கிப்பிடிப்பதுண்மையானால் அதைச் சோதிப்பதற்குத் திருநெல்வேலியே தகுதியான இடமென்பதை ஸ்ரீமான் நாயக்கருக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

ஆகையால் சுயமரியாதையற்ற விடத்தில் சுயமரியாதையை உண்டு பண்ணவும் சுயமரியாதையுள்ள விடங்களில் குறைந்து போகாமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இவ்விஷயத்தில் பிராமணரல்லாத சகோதரர்கள் யாவரும் யாதொருபேதமுமின்றி ஒத்துழைக்கவும் வேண்டும்.

நாட்டில் எவ்வியக்கங்களுண்டானாலும் நல்லியக்கமெனக் கண்டவ்வியக்கங்களிலெல்லாம் நாடார்கள் சம்பந்தமில்லாமலிராது. இயக்கத்தாரெல்லாம் நாடார்கள் கூட்டுறவை நாடாமலுமில்லை. நாடார்களுக்கு இருஜில்லாக்களில் ஒரு விஷயத்தில் சிறிது சுயமரியாதைக் குறைவிருந்தாலும் நாட்டிற்குச் செய்யவேண்டிய தொண்டில் மற்றவர்களுக்குப் பிற்பட்டவர்களல்ல வென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

நாடார்களுக்குள்ள சிறு குறையை மாற்றுவதாகவே மதுரை, இராமநாதபுரம் ஜில்லா மகாநாடு, மதுரை மகாநாடு, திருநெல்வேலியிற்கூடிய பிராமணரல்லாதார் மகாநாடு முதலிய பல மகாநாடுகள் தீர்மானித்திருப்பதுடன் தனிப்பட்ட பெரியமனிதர்களும் அனுதாபத்துடன் கவனிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையும் அனுஷ்டானத்தில் அணுவளவேனும் காட்டவில்லை. நாடார்கள் குறையை நன்கு கவனியாத காங்கிரஸ் கமிட்டி திருநெல்வேலியிலிருப்பதைப் பார்க்கிலும் இறப்பது நன்றென்று மகாத்மா காந்தியடிகளேநேரில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். வி. ஆர். தாஸ் அதை ஆதரித்திருக்கிறார். இவர்களைப் பார்க்கிலும் இனியார் வந்திடித்துரைக்க வேண்டும்? ஏன் இன்னும் கவனிக்கவில்லை? இனியேனும் கவனிப்பார்களா?

கோயிலில் ஒரு பிராமணன் கையால் தேங்காயுடைக்கப் பெறுவது பிராமணரல்லாதாருக்குச் சுயமரியாதைக் குறைவெனக் கருதும்போது ஒரு சில கோயிலையே கும்பிடக்கூடாதென்று நாடார்களைப் பார்த்துச் சொன்னால் அவர்கள் மனதை எவ்வாறு வருத்தும், எப்படி உறுத்தும் என்பதை சுயமரியாதைத் தலைவர்கள் கவனிக்கவேண்டும். வடஜில்லாவில் கோவிலதிகாரிபாயிருக்க தென்ஜில்லாவில் கோயிலைக்கும்பிட உரிமையில்லை யென்றால் சுயமரியாதைக் குறைவு எவ்வளவென்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும். ஆனால் பொதுவாக பிராமணர்கள் கொடுமை யொழிந்தால் எல்லாம் தீர்ந்து விடுமென்றால், சுயராஜ்யம் வந்தால் சுயமரியாதை வந்துவிடுமென்ற கதைதானென்று நாடார்கள் சொல்லக்கூடும். பிராமணரல்லாதார் உண்மையில் வழிவிட்டுக் கொடுப்பதை பிராமணர்கள் தடுத்தால் நாடார்கள் அதை உடைத்து உள்ளே செல்லமுடியும். நாடார்களில் கல்யாணம், கருமாதி, சடங்கு, திதி, கோயில், மடம், குரு முதலிய சகல துறைகளிலும் பிராமணர்கள் சம்பந்தமுண்டு. அவைகளை உடனே பகிஷ்கரிக்கவுங்கூடும். ஆகையால் நாடார்கள் விஷயத்தில் பிராமணர்கள் பேரில் பழிசுமத்துவதை நாடார்கள் ஒப்பமாட்டார்கள். கோயில்களில் பூர்வீகமாய் நாடார்களுக்கிருந்துவந்த மரியாதைகளும் பிராமணரல்லாதார்களாலேயே பெரும்பாலும் குறைக்கப்பட்டதென்பதை சமயம் நேரும்போது விரிவாக எழுதுவோம்.

சுயமரியாதைப் போர் வீரர் ஸ்ரீமான் நாயக்கர், நாடார்களின் சிறுகுறையை நீக்குவதற்கு உடனே போர் தொடங்குதல் வேண்டும். ஸ்ரீமான் நாயக்கர் இபக்கத்திற்கு ஆதரவாயுள்ள தலைவர்களும், குடியரசு, திராவிடன், ஜஸ்டிஸ் முதலிய பத்திரிகைகளும் இது விஷயத்தில் முழுமனதுடன் வேலை செய்யவேண்டும். செய்தால் முடியாதகாரியமொன்றுமேயில்லை. வேலை செய்தால் என்ன நேருமோவென்றஞ்சுவார்களானால் பயங்கொள்ளிகளென்று பகரநாமொருபோதும் அஞ்சோம். நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோமென்பதை நாம் காட்டுவோம். இலைமறைகாய் போலிருக்குந்தலைவர்கள் ஏன் முன் வரக்கூடாதென்று கேட்கின்றோம். சுயமரியாதைக்குப் பாடுபடும் குடியரசு, திராவிடனும் என்ன செய்கின்றனவென்று எதிர்பார்ப்போம்.

---

## செல்வப் பிள்ளைகள்.

கல்லாத—இல்லாதவர்கள் வீட்டுப் பிள்ளைகளே யானாலும் தாய் வீட்டாரும் தாயைப்பெற்ற தாய் வீட்டாரும் தகப்பன் தாய் வீட்டாரும் பிள்ளைகளைச் செல்வமாகப் பாராட்டி வளர்ப்பதும் அவர்கள் கடுமொழிகளையும் அன்பாய்க் கொண்டு இடும் ஏவல்களையும் இசைந்து செய்தின்புறுவதியல்பு. இதனால்குழலினிதுயாழினினிது என்பர், தம் மக்கள் மதலைச்சொற் கேளாதவர் என்றும், அமிழ்தினுமினிய தென்பர்தம் மக்கள் சிறுகையளாவிய கூழ் என்றும் நாயனார் குறிப்பிட்டிருக்கும் குதலைவாய் மைந்தர் கூட்டுறவால் உள்ள நிகழ்ச்சி எவ்வாறென்பது நன்கு விளங்குகிறது. சிறு பிள்ளைகள் முத்தலத்திலும் செல்வப்பிள்ளைகளாக வளருகிறார்கள். வளருவார்களென்பது உலகப் பிரசித்தம்.

தற்போது சென்னை மாகாண அரசியலை ஏற்றுக்கொண்டிருக்கும் மந்திரிமார்கள் மூவரும் ஏற்ற ஆரம்பதிசையில் செல்வப்பிள்ளைகளாக விளங்குகிறார்கள். அவர்கள் எங்கெங்கு சென்று எவ்வாறு பேசி என்னதான் செய்தாலும் முத்தலத்தார் (சுயராஜ்யா, சுயேச்சை, ஜஸ்டிஸ்)களும் அவர்களைக் குற்றம் சொல்லுவதில்லை. சிறுகை அளாவியகூழ் அமிழ்தினுமினிய தென்றும், மக்கள் மதலைச்சொல் மிக்க யாழினுமினியதென்றும் வாழாவிருக்கின்றனர்.

மந்திரிகள் நம்மாகாணத்தை வலம் சுற்றிவருகிறார்கள். சுற்றுமிடங்களில் போற்றுங் கடிதங்கள் பல பெற்றுளார்கள் படித்தவிடங்களிலெல்லாம் பழய மந்திரிகள் பாடத்தையே பதிலாகப் படித்துவிட்டார்கள். எந்த ஏழையின் இல்லத்தையும் எறிட்டுப்பார்க்கவில்லை; என்ன குறையென்று பார்க்கவில்லை. அந்தோ! இவர்கள் வீடு வீடாய்ப் புகுந்து வாக்குக் கேட்டவர்கள்தானே. மதுரை வரவேற்பை யடைந்தவர்கள் சமயநல்லூர் கிராமத்தார் இச்சமயமென்ன ஸ்திதியிலிருக்கிறார்கள்; அவர்களுக்கென்ன குறையென்பதை முன்னரே யறிய முயன்றாலன்றோமுறையாகும். நகரத்துக்கு கார்தண்ணீர்க்கில்லாவிடில் என்ன கெட்டுப் போகுமென்பதை கனம் மந்திரிகள் கண்டுணர்ந்தார்களா? நகரங்களிலுள்ள ஆஸ்பத்திரிக்கு 50 லட்சமா? கஷ்டப்படுவது கிராமமன்றோ! அதிகவரி கொடுப்பதும் கிராமமன்றோ! கலால் வருமானங்குறைந்தால் சுகாதாரங் குறையுமென்று கனம் மந்திரி பதிலிறுத்திவிட்டாரே. கள்ளை நிறுத்துவோமென்று கர்ச்சித்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் எங்கே? வி ராஜகோபாலாச்சாரியார் எங்கே? சுதேசமித்திரனில் அடுக்கடுக்காய் எழுதிய அவர் குறள் வாக்கியங்களெங்கே? முட்டுக்கட்டை போடுவோமென்று வீரம் பேசிய சுயராஜ்யக் கட்சி தானெங்கே? தாஸ்தான் மடிந்தார்; அவர் கொள்கையும் மடிந்ததா? ஸர் பாத்ரோ மீது சதா சொற்பாணம் பொழிந்த ஸ்ரீமான் சக்திமூர்த்தி என்ன செய்கிறார்? ஆரோக்கியஞ் செழிக்கப் படைத்தெழுந்த என் ஆரோக்கியசாமி என அணைத்து முத்தங்கொஞ்சுகிறாரா? "நும் தானதகி லோராண்டேனும் நானிருக்க நின் சித்தமிரங்க வேண்டி" மெனக் கெஞ்சுகிறாரா? வாய்ப்பாணம் சிபார்சினால் மழுங்கிவிட்டதா? சிரத்தையென்னும் பாறையில் தீட்டக்கூடாதா? அஸாம் தேசிய மகாசபையில் சிறந்து விளங்கிய ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் ஒரு சமூகத்தின் தலைமை ஏற்றன்பு செலுத்துவதைப் பார்க்கிலும் ஒரு தேசத்தை நோக்குதல் சாலவும் நன்றென்று சாற்றிய வாக்கியத்தை அவர் கட்சியாராவது ஏற்று சென்னைச் சட்டசபையில் தேசத்தை நோக்குதல் கூடாதா? குடியை ஒரு கால வரையறைக்குள் ஒழிக்கலாமென்ற கொள்கையை ஒப்புக் கொண்டவர்கள் மீது சீறிவிழுந்த கனவான்களெங்கே? சிங்கமுழக்கங் கொண்ட மண்டபம் ஊமையன் வீடு போலிருப்பது ஒழுங்கா?

அபிவிருத்தி மந்திரியவர்கள் ஸ்திரப்பட்ட தேவஸ்தான மசோதாவை சர்வகட்சிகளுக்கும் சம்மதமான முறையில் திருத்துவோமென்றாரே; நம் நாட்டில் ஜாதி பேதங்களொழிந்து சமரசஞானம்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### லாட்டரியில் பிரைஸ் கிடைத்தவர்களுக்கோர் அறிக்கை.

நாடார் மஹாஜன சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரிச் சீட்டில் பிரைஸ் கிடைத்தவர்கள் யாவருக்கும் 1927 வரு ஜனவரி மீ 10 உ யோடு பிரைஸ் தொகைகளை நேரில் கொடுத்தும் மணியார்டர் மூலம் அனுப்பியுமிருக்கிறோம். மணியார்டர் மூலம் அனுப்பியதில் சில விலாசதார்கள் ஊரிலில்லாமலும் சிலருடைய விலாசங்கள் சரியாயில்லாமலும் டெலிவரி செய்யமார்க்கமில்லாது மணியார்டர்கள் வாபஸ் வந்திருக்கின்றன.

ஆகையால் பிரைஸ் கிடைத்து பணம் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவரவர்களுடைய சீட்டை 1927 வரு ஏப்ரல் மீ 30 உ க்குள் சங்கம் ஆபீசுக்குஅனுப்பி பணம்பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் வாபஸ் வந்திருக்கும் பணங்களை நாடார்மஹாஜன சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்குச் சேர்த்துக்கொள்ளப் பெறுமென்பதை இதன்மூலம் அறிவிக்கின்றோம்,

காரியதரிசிகள்.

---

திலக்க, தொடாதே, பாராதே, வராதே என்று ஞானமும் கல்வியும் செல்வமும என்னிடம் வராதே அணுகாதே தொடாதே எனச் சொல்லித் தொள்ளும் பேதமை யொழியும் வண்ணம ஈஸ்வர சன்னிதானம் எல்லோருக்கும் பொது; யாவரும் போய் தொழுகை செய்பலாமென்று பொருத்தமாய்த் திருத்துவாரா? ஸ்ரீரெங்கநாதன் சர்வான்மாக்களுக்குப் படியளப்பாரென்ற ஐதீக விரோதமாய் ஒரு சார்பார்மட்டும் வயிறு புடைக்கத் தின்பதற்கு கோயில்களிலெல்லாம் படியளந்து கொண்டிருப்பதற்குச் சார்பாகவே இன்னும் திருத்திப் பொருத்தி விடுவாரா வென்பதை ஜஸ்டிஸ்க்கட்சி கவனிக்குமா?

தேவஸ்தானச் சட்டத்தைத் தகர்த்து விடுவோமென்றும், கலால் வருமானத்தைக் குறைக்க முடியாதென்றும் மந்திரிகள் பகிரங்கமாய்ச் சொல்லிவிட்டதைக் கண்ட ஜஸ்டிஸ் கட்சியும், சுயராஜ்யக்கட்சியும் வீரமொடுங்கி யிருப்பது விந்தையாயிருக்கிறது. சுயராஜ்யக் கட்சிக்கொள்கைக்கு விரோதமாக கலால் மந்திரி பேசுகிறார். ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைக்கு விரோதமாக அபிவிருத்தி மந்திரி பேசுகிறார். இந்நிலைமையில் இவ்விரு கட்சிகளும் வாய்மூடிக் கொண்டிருப்பதின் இரகசிய மென்னவோ! செல்வப் பிள்ளைகளென்றோ! தாய் வீடாகிய சுயேச்சை கட்சிக்குத் தானே அம்முறை தகும். தட்டி வளர்ப்பது தந்தையின் கடனன்றோ! நாட்டின் வறுமைக்குக்காரணமாயிருப்பது மதுவருந்தல். அதை விலக்குவதற்கு ஒத்துவராத எந்த மந்திரி சபைகளையும் உடைத்தெறிய வேண்டியது ஜனப் பிரதிநிதிகளுடைய கடமை. அதற்குத்தைரிய மில்லாதவர்கள் உடனே வெளியேறி விடவேண்டியது முக்கியமான கடமை. கலாலை நம்பியிருப்பதைப் பார்க்கிலும் கதரையும் காந்தியடிகளையும் நம்பியிருப்பதுமேன்மையுள் தூய்மையுமாகும். இத்துணை மந்திரிகள் முத்தலத்திலும் எத்தனை நாள் தான் செல்வப்பிள்ளைகளா யிருப்பார்களென்பதை வரவரக் கண்டறிவோம்.

காமிதை எழுதி முடித்தபிறகு கடற் கரைக் கூட்டத்தைக் கண்டோம். அதைப்பற்றிப் பிறகு எழுதுவோம்.

## இலங்கை நாடார் மகாஜனங்களுக்கு இன்னுரை.

(தேவிதாஸன் எழுதுகிறார்.)

ஐயன்மீர் !

“ நாடார்குல மித்திரன் ” அதிபர் ஸ்ரீமான் எஸ். ஏ. முத்து நாடாரவர்கள் இலங்கைத் தீவிற்கு விஜயம் செய்திருக்கிறார்கள் என்ற விஷயமறிவீர்கள். நமக்கொரு பத்திரிகையில்லையே—நமது குறைகளை கவர்ன்மெண்டாருக்கு எடுத்துரைக்க வாயில்லையே—நம்மை அசம்பாவிதமாய் தாக்கும் போலி ஆசிரியர்களையும், போலிப் பத்திரிகைகளையும் கொட்டம் அடக்க பத்திரிகை யில்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்த காலம் நமது “நாடார் குல மித்திரன்” அருப்புக்கோட்டையில் ஸ்ரீமான் எஸ், ஏ, முத்து நாடாரவர்கள் தவப்பயனாய் உதித்தான்.

சங்கத்திலிருந்து பத்திரிகை ஆரம்பிப்பதா ? லிமிட்டெட் கம்பெனியொன்று பங்கு சேர்த்து நடத்துவதா என்று வெறும் வாயை மென்று கொண்டிருந்த காலத்தில் “ நாடார் குலமித்திரன்” ஸ்ரீமான்முத்து நாடார் அவர்கள் சொந்த முயற்சியால் தோன்றினன். மாத மொருமுறை உதித்த மித்திரனை கடவுளின் அருளினாலும், பெரியோரின் ஆசீர்வாதத்தாலும், குலாபிமானப் பால்யரின் ஒத்துழைப்பாலும் ஸ்ரீமான் மூத்து நாடாரவர்கள் இருமுறையாக்கி, மும்முறையாக்கி, வாரப்பதிப்பாக்கினார்கள்.

இது காலத்திற்கிடையில் “மித்திரன்” அதிபரவர்கள் மித்திரனுக்காக அடைந்திருக்கிற சிரமம் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள்.

“மித்திரன்” தோன்றிய பின் நம்மவர்களால் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறைந்திருக்கின்றன. என் ?

நண்பர்களே ! மித்திரன் எதிர்கால நன்மைக்கு ஆதாரமாகவே லாட்டரிச் சீட்டு ஆரம்பிக்கப்பட்டது.

நாடார் உலகம் உள்ளளவும் நாடார் உலகிடையே “மித்திரன்” உலவுதல் வேண்டும். இதற்காகவே லாட்டரிச் சீட்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆகவே இலங்கையில் வாழும் நாடார் பெரு மக்களே ! ஏனோ தானோ வென்றிராமல் மித்திரன் லாட்டரிச் சீட்டின் உட் கருத்தை உணர்ந்து இவண் விஜயம் செய்திருக்கும் ஸ்ரீமான் எஸ். ஏ. முத்து நாடாரவர்களுக்குப்பேராதரவு செய்ய பணிவுடன் வேண்டுகிறேன். சுபம்.

### ஸ்ரீ ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் ஓர் தர்க்கசங்கம் லைப்ரேரி ஹாலில் 6-3-27 மாலை 6 மணிக்கு ஸ்ரீமான் அ. ச. மாயக்காளை நாடார் அவர்கள் தலைமையின் கீழ்நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்கள் “இந்தியாவின் முற்கால, தற்கால நிலைமை” என்னும் பொருள்பற்றி விரிவாகப் பேசியதில் முற்காலத்தில் இந்தியா அதிகாலையில் பழையது உண்டு, கேழ்வரகு, கம்பரிசி, வேர்க்கடலை, காய்கறி முதலிய ஆகாரமருந்தி திடசரீரிகளாக விருந்தனரெனவும், விளக்கெண்ணெய் விளக்கு முதலியன கொளுத்தி வயோதிகம் வரையில் பிரகாசமான பார்வையுடையவர்களாக யிருந்தனரெனவும், ஆனால், இக்காலத்திலோ, காபி, டீ, அருந்தி தேகத்தை எரித்துக்கொள்கிறார்களெனவும், பலதரப்பட்ட மின்சார விளக்குகளால நமது நாட்டு வாலிபமக்கள் பால்ய தசையிலேயேபார்வைகுன்றி கண்ணாடி தரித்துக் கொள்ளுகிறார்களெனவும், இதில் வேடிக்கையாகவும் கண்ணாடி தரித்துக்கொள்கிறார்களென்வும் இன்னும் பலவாறாக சென்று போன நாட்களைக் குறித்து வருந்தி, இனி மேலாவது நாட்டினர் மகாத்மாஜீயின் கொள்கையைப் பின்பற்றி இயற்கை எளியவாழ்வு வாழ்ந்து வரவேண்டுமெனக் குறிப்பிட்டார்கள்.

பின்னர் இரவு 9½ மணிக்கு சபை இனிதுகலைந்தது எனக் காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

## செயற்கை சாதனம்.

### ஆண் பெண்ணானன், பெண் ஆணானள்.

மாஸ்கோநகரிலுள்ள டாக்டர் ஐ. எ. கோலானிட்ஸ்கி என்பவர் ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் செயற்கையில் மாற்றக் கூடுமென்றும் அவ்விதமே 1926 ல் ஆறு பேர்களை மாற்றியுமிருக்கிறாராம். ஆனால் தேக அமைப்பையும், மனத்தின் நிலைமையையும் பொருத்துத்தான் இவ்விதம் ஆணாகவோ, பெண்ணாகவோ மாற்றக் கூடுமே யல்லாது நினைத்தவர்களையெல்லாம் மாற்றச் சாத்தியப்படாதென மொழிகிறார்.

மேற்சொன்ன அறுவரில் 19 வயதுள்ள “ஆன்” என்னும் பெண் முதன்மையானவள். இவள் ஆண்மகனாக விரும்பினாள். இவளுடைய மனோபாவம் பெரிதும் ஆண்மகனுடையது போலவே இருந்தது. எனவே மேற்படி டாக்டர் இவளுக்கு ஒன்பது முறை இரண சிகிச்சை செய்தார். கிளாண்ட் என்னும் உள்ளுறுப்புகளில் சிலவற்றை எடுத்து விட்டும் சிலவற்றைப் புதிதாகச் சேர்த்தும் அவள் உடலின் கிளாண்ட் அமைப்பையே மாற்றிவிட்டார். இதன் பயனாக அப்பெண் இப்போது முழுதும் புதிய தோற்ற மடைந்து ஆண்மகனாகித் தன் பெயரையும் “விக்டர்” என மாற்றிக்கொண்டிருக்கிறாள்(ன்?)ம்!

26 வயதுள்ளவளும், உபாத்தியாயினியுமான “ஹமீர்ஜா” என்னும் பெண்ணுக்கும் இதே சிகிச்சைசெய்யப்பட்டது. இப்போது ஹமீர்ஜா ஆணாகி ஓர் அழகிய சிறு பெண்ணைக் கலியாணமும் செய்து கொண்டிருக்கிறான் !

மூன்றாவது பெண்ணான “ மேரி ” என்பாள், இதற்கு மாறாக, தன்னிடமிருந்த ஆணுக்குரிய சில சுபாவங்களைப் போக்கிக் கொண்டு, முற்றும் பெண்மைக் குணங்களையே பெற விரும்பினாள். இதுவும் இச்சிகிச்சையினால் கைகூடிற்றாம்.

“மேரி எல்” என்னும் மற்றொரு பெண் 23 வயதானவள். இவள் உடல் அமைப்பு பெண் அமைப்பாயிருந்தாலும் மனோபாவம் முழுதும் ஆண் மனோபாவமாயிருந்து இவள் தன் உள்ள நிலைக் கேற்றவாறு உடம்பு அமைப்பை மாற்றிக்கொள்ள விரும்பினாள். இது சாத்தியமாயிற்று என்று மேற்படி டாக்டர் சொல்லுகிறார். இப்போது “ விளாடிமீர் ” என்ற பெயருடன் அவள் நெட்டையான ஓர் இளைஞனாகி “ஸோவியட்” சைன்யத்திலும் சேர்ந்திருக்கிறாள்.

## எங்கே?

### கொழும்பு க்ஷத்திரியகுல பால்யரின் மனோகர வாசகசாலை எங்கே ?

(நாடார் குல நண்பர் எழுதுகிறார்.)

நண்பர்களே !

மனோகர வாசகசாலை அன்பர்களே !! உங்களது க்ஷத்திரிய வீரத்தன்மை எங்கே ? எதிர்காலம் ஏற்றம் பெறவிருக்கும் பால்யரின் மனோநிலை விருத்தியடைய நீங்கள் செய்துள்ள கருமம் போற்றற்குரியது. ஆனால் இடையில் அக்கருமத்தினின்றும் நழுவி “பழையகறுப்பனே கறுப்பன்” என்ற பழமொழிக்கிலக்காயினீர்களே. அந்தோ ! பரிதாபம் !!

சென்ற 1923-ம் ஆண்டில் ஏப்ரல் மீ 23உயில் சென்னை க்ஷத்திரிய மித்திரன் அதிபரவர்களை வரவேற்றுபசரித்து குல கைங்கர்யத்தில் ஈடுபட்ட உங்களது குல இயற்கை க்ஷாத்திரம் எங்கு சென்றது ? பற்பல உலக மாறுதல்களுக்கிடையில் நீங்களும் பல திறப்பட்ட வெளகீகவாழ்க்கையில் [illegible]

## திக்கு விஷயம்.

அருப்புக்கோட்டை நாடார்கள் பொதுஸ்ரீ அமுதலிங்கேஸ்பரர் ஆலயத்துள்ள விக்கிரகங்களுக்கு கதராடையும் அணியப்பட்டுவருகிறது. சென்ற மகாசிவராத்திரி யன்று மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்பரர் ஆலயத்துள்ள விக்கிரகங்களுக்கு தூய கதராடை அணியப் பெற்றிருந்தனவாம்.

---

இங்கிலாந்தைச் சேர்ந்த அல்வாஸ்டன் என்னுமிடத்திலுள்ள மிஸ்டர் ரோலண்டு என்பவர் உலகத்திலேயே மிகச் சிறியதான கியாலண்டர் 1927ம் வருடத்திற்குத் தயார் செய்திருக்கிறாராம். ஒரு கால் ரூபாய் அளவு தானும் அதன் விஸ்தீரணம்! என்றாலும் அதிலடங்கிய தேதி விபரங்கள் யாதொரு உதவியின்றியும் பூரணமாய்த் தெரிகின்றனவாம்.

---

இத்தாலி தேசத்தில் இஸார்க்கோ நதியை ஒரு பெரிய குழாயில் பாயும்படி செய்து அதன் படுக்கையிலிருந்து 8 மைல் தூரமுள்ள பால்ஸானோ நகருக்குக் கொண்டு சென்று 700 அடி உயரத்திலிருந்து கீழே விழும்படியாக செயற்கை நீர வீழ்ச்சி யொன்றை உண்டாக்கியிருக்கிறார்கள். இதிலிருந்து 220000 குதிரைப் பவருள்ள மின்சார சக்தி உண்டாகுமாம்.

---

ஐரோப்பாவிலுள்ள ஆஸ்திரியா தேசத்தின் தலை நகராகிய வியன்னா, உலகத்திலேயே அதிசுத்தமானதென்று பெயர் விளங்கி வருகிறது. தூசி துரும்புங்கூட வீதிகளில் போடவிடாதபடி ஜனங்களைப் பார்த்து வரப்படுகிறதாம்.

---

டாக்டர் அன்னிபெசண்டம்மையாரால் சென்னையினின்றும் வெளியிடப் பெற்ற “நியூ இந்தியா” எனும் தினப் பதிப்பு மார்ச்சு மாதம் 15உ முதல் டம்பாயினின்றும் வாரப் பதிப்பாக வெளியிடப்படுமாம்.

---

கதர் நிதி திரட்டும் காரியார்த்தமாக இந்திய தேச மெங்கணும் சுற்றுப் பிரயாணஞ் செய்யப் புறப்பட்டிருக்கும் மகாத்மா காந்தியடிகளை, மைசூர் சமஸ்தானம் பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்தான பின்னர் மைசூரில் ராஜாவின் விருந்தினராகத் தங்கியிருக்குமாறு வேண்டிக் கொள்வதாக ராஜாவின் பிரதிநிதியாக திவான் மிர்ஸா, எம். இஸ்மேல் அவர்கள் ஸ்ரீ காந்தியடிகளுக்கு அழைப்பு விதிதமனுப்பியிருக்கிறாராம்.

---

எதிர்காலத்தில் பெரியமனிதராகும் நீங்கள் வாசகசாலையை மீண்டும் காணல்வேண்டும். விருதுநகர் நாடார்களின் நிலைமையை நீங்கள் அறியீர்களா ? டி. ஆர். வாசகசாலையின் சிறப்பன்றோ மணம் பெறுகின்றது.

ஆகவே யாம் உங்களை வினவுவதென்னவெனில் இடையில் நின்றதை ஈடேற்றீர்களா ? மனோகர வாசகசாலைதான் உங்களது மனோநிலையை விருத்தி செய்து மனோதிடத்தை யளிக்கவல்லது. நமது மித்திரன் அதிபர் உங்களை இங்குவந்து சேர்ந்தவுடன் கேட்டார்கள். இடையில் நின்றுவிட்டது என்று யாம் பதிலிறுத்தோம். இடையில் நின்றதை ஈடேற்றீர்களா ? என்று மீண்டும் கேட்கின்றோம்.

அன்பர்களே ! இதுவே தக்கதருணம். “ மித்திரன் ” அதிபரவர்களை எற்றுபசரித்து க்ஷத்திரிய குல பால்யரின் மனோநிலையை வெளியிட ஏற்றதருணம்.

“எழுமின், விழிமின், கருதிய கருமம் கைகூடும்வரை, சலியாதுழைமின்.”

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஓர் விருந்து.

### ஜாதிபேதத் திரை நீக்கப்பட்டது.

அருப்புக்கோட்டை சைவபாது க்ஷத்திரிய ஹைஸ்கூல் உதவி மானேஜரும் பால்ய அபிமானிகளிற் சிறந்தவரும் பொதுஜன சேவையே பூஷணமாகக் கொண்டவருமான ஸ்ரீமான் ச. சு. பழனிச்சாமிநாடார் அவர்கள் இல்லறவாழ்க்கைக்கு நல்லதான "விருந்தோம்பலை" மேற்கொண்டு தனது அன்பிற்குகந்த நண்பர்களுக்கு 5—3—27-ல் உயர்தரமான விருந்தொன்று நடத்தினார்கள். அவ்விருந்துக்கு ஸ்ரீமான்களான எஸ். வி. வெங்கட்டராமஅய்யர்எல். யம். பி., டாக்டர் பாண்டியன் (தேவர்), து. சு. இரத்தினசாமிபிள்ளை-கிராம முனிசிப், சுப்பிரமணியபிள்ளை-மதுரை, துரைச்சாமி நாயுடு, ஆ. அ. குமரகுருபரர்—தமிழ் பண்டிட், துவெயிட்ஸ் உபாத்தியாயர், தி. கருப்பையாபிள்ளை, மா. வே. மா. மாணிக்கவேல்நாடார், அ. து. கல்யாணசுந்தரநாடார்—காரியதரிசி, ஷண்முகவேல் வாசகசாலை, தூத்துக்குடி, கல்யாணிசெட்டியார், நாடார் எலிமெண்டரிஸ்கூல் மானேஜர் சு. பொ. அமுதபாண்டியநாடார், திரு. பெ. திருமேனிநாதர், பெ. ஞெநிநாதர்-மு. மு. வாசகசாலை காரியதரிசி மற்றும் நேயர்கள் பலர் வந்திருந்தனர். விருந்தினர்கள் யாவரும் வந்ததும் சரியாய் 2 மணிக்கு விருந்தினர் யாவர்கட்கும் சமையலிற் றிறமை வாய்ந்த மகா-௱-௱-ஸ்ரீ செந்தூரநாடார் அவர்களால் பக்குவம் செய்யப்பட்ட அறுசுவையுடன்கூடிய அன்னம் சமபந்தியாகப் படைக்கப்பெற்றது. பச்சடி கூட்டு பாகமாய் இயற்றிய துவட்டல், அப்பள மொடு முப்பழம், நெய், மோர் தேனென பல்வகையாய் இட்டதை யுண்டு இதயங்களித்தனர். சந்தனம், தாம்பூலம் வழங்கிய நேர்த்தி விளம்பற்பாமன்று. அனைவரும் உண்டபின் மேல்மாடியில் ஸ்ரீமான் டாக்டர் பாண்டியன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் மகா-௱-௱-ஸ்ரீகளான தி. கருப்பையாபிள்ளை, சு. இரத்தினசாமி பிள்ளை, அ. பெ. இரத்தினவேல் நாடார், திரு. பெ. திருமேனிநாதர், ஆ. அ. குமரகுருபரர், கல்யாணி செட்டியார் ஆகியவர்கள் விருந்தின் நோக்கம்பற்றியும் விருந்தை நடத்திவைத்த அன்பரின் சௌஜன்யங்குறித்தும், திறமை குறித்தும், அவரின் இணையற்றிய சேவைபற்றியும் சொன்மாரிபொழிந்தனர். உயர் குடும்பத்திற் பிறந்து தனது அதிபால்யம் முதற்கொண்டே "தான் இன்புறுவதெல்லாம் உலகின் புறக்கண்டு" எனும் முதுமொழிப்படி பொதுஜன சேவையே தமதருஞ்சேவையாகக் கொண்டு பரந்த மனதும் விரிந்த நோக்கமும் சிறந்த குணமும் படைத்து எடுத்த காரியத்தைத் தொடுத்து முட்டின்றி முடிக்கும் திறமை பெற்றிட்டவரென்றும், "அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலைதானேவந்தெய்தும்பராபரமே" எனும்குறளார்நீதிக் குவமையாக அடியார்க்கடியராய்தொண்டு செய்தலில்முன்னுகட்டுபவரென்றும் அதசமயம் பேசியதுகுறிப்பிடத்தக்கது. இந்தியர்களைப் பெரிதும் அலட்டிவரும் மதபேதம் ஜாதிபேதத்தைச்சுழற்றியெறிந்து அடிமைப் புத்தியால்கைக்கருகுதற்குக்காரணமாயமதக்கோட்பாடெனும் விலங்கைக்கழற்றிமனிதர்க்குள்பேதாணுபேதங்கருதாது யாவரும்சர்வசுதந்திரமும் பெறற்குரியவரே எனும் சித்தாந்தத்தை முதல் முதலில் இந்நகரின் கண்ணே நிலைநாட்டுதற்கறிகுறியாக அனைவரையும் புகைப்படமெடுக்கப்பெற்று மாலை சிற்றுண்டி வழங்கப்பெற்று விருந்து இனிது நிறைவேறியது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## தீண்டாமை

### ஆண்டவன் சம்மதமல்ல.

### அத்திய வழக்கத் தியை

### ஒழிக்க.

---

கந்தசுவாமிபுரம்

## கிராம பஞ்சாயத்து.

மேற்கண்ட தலைப்புடன் 28-2-27ல் நமது மித்திரன் 6-வது பக்கத்தில் யோ. ரோ. ப. கோ. கம்பெனியார் எழுதிய நிருபங்கண்டு வியப்புற்றோம். கந்தசுவாமிபுரம் கிராமத்தில் சட்டப்படி பஞ்சாயத்து ஏற்பட்டு ஜில்லா கெஜட்டில் பிரசுரமாகி சுமார் 7, 8 மாதங்களாகிவிட்டன. அப்படி இருக்க நிருபர்கள் பஞ்சாயத் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். ஜன நன்மையைப் பெரிதும் நாடி வருகிற வியாபாரிகள் இப்பஞ்சாயத்தில் அங்கம் பெற வில்லை என்றால் அது யாருடைய குற்றம்? ஆளுக்கு முன் அபேக்ஷகராய் வராமல் ஒதுங்கிக் கொண்டு பின் குறை கூறுவானேன்? இப்பவுமென்ன? மறு எலெக்ஷனில் விருப்பமுள்ளவர்கள் தாராளமாய் அபேக்ஷகர்களாய் முன் வர இடமில்லாமலில்லையே! எலெக்ஷன் முதலிய சகலமும் பேப்பர்களிலும், ஜில்லா கெஜட்டிலும், தண்டோரா மூலமும் பகிரங்கமாய்ப் பிரசித்தம் செய்யப்பட்டிருக்கையில், இரகசியமாய் இச்சபை ஆக்கப்பட்டிருப்பதாகக் கூறினால் நம்புவது யார்? கிராமத்திலுள்ள சர்வ ஜனங்களையும் தனித்தனி நபர் வாரியாகக் கலந்து அனுமதி பெற்றுபஞ்சாயத்து ஏற்படுவதென்றால் எந்த யுகத்திலும் நடைபெற மாட்டாது. பொதுவாக ஜனங்களின் சம்மதத்தின் பேரில் தான் நம் கிராமப் பஞ்சாயத்திற்கு ஆரம்பத்தில் மனுச் செய்தோம். அதிலும் நம் கிராமத்தை ஆறுமுகநேரி கிராமத்துடன் சேர்த்து ஒரே பஞ்சாயத்தாக்க அநேகர் முயற்சித்தபடியால் நம் முக்கியஸ்தர் பிரயாசையுடன் தனிப் பஞ்சாயத் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார்கள். சென்னை இராஜதானி முழுவதிலுமுள்ள எல்லா ஜில்லாக்களிலும் இதுவரை ஏற்பட்டிருக்கிற எல்லாப் பஞ்சாயத்துகளிலுமே ஆக்ஷேபனை இருக்கத்தான் செய்கிறது. நம்மூரில் மட்டுமல்ல; பல கிராமங்களிலும் இந்தச் சட்டம் புதிதாய் இருப்பதால் விபரந் தெரியாமல் சில ஜனங்கள் ஆக்ஷேபிப்பது சகஜம். படித்த மேதாவிகளும், சட்டசபை அங்கத்தினர்களும் இப்பஞ்சாயத்து ஒவ்வொரு கிராமங்களிலும் தீவிரமாய் ஏற்பட பலமான முயற்சி செய்கிறார்கள். நம்மூர் பஞ்சாயத்து இதுவரை வேலை ஆரம்பிக்காமலிருப்பது விசனிக்கத்தக்கது. பொது ஜனங்கள் ஒற்றுமைத்தால் நம் கிராமத்திற்கு எவ்வளவு நன்மையுண்டு. நம் ஊர் பணம் வரி மூலமாகத் தாலுகாப் போர்டுக்காவது, வேறு இலாக்காவுக்காவது போகாமல் பூரா வருமானங்களையும் இப்பஞ்சாயத்து மூலம் பெற்று நம் கிராம நன்மைக்குச்செலவிடுவதே இப்பஞ்சாயத்தின் நோக்கம். பஞ்சாயத்தார்களை வேலை வாங்குவது பொது ஜனங்களாகிய நமது கடமை. பஞ்சாயத்தார் அபராதம் போடவாவது, கேஸ் பிடிக்கவாவது யாதொரு அதிகாரமுங்கிடையாது. பஞ்சாயத்து ஏதாவது கெடுதலான காரியம் செய்ய சர்க்கார் இடங்கொடுக்க மாட்டார்கள். ஆகையால் பயப்படத் தேவையில்லை. நம் கிராம நன்மையைக் கருதக்கூடிய அபிமானிகளெல்லாம் பஞ்சாயத்துடன் ஒற்றுமைப்போமாக! பஞ்சாயத்து மூலம் யாதொரு கெடுதலுமில்லையாதலால் ஆக்ஷேப மனுக்களைச் சர்க்காரில் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். வீண் செலவு செய்வதில் பிரயோஜனமில்லை.

கோ. ஏசுதாஸன்.

---

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும், கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர், பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜேயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்

ஸ்ரீரங்கம், (திருச்சி.)

---

## என்ன செய்ய வேண்டும்?

பாராண்ட பாண்டியன் மரபினர்காள்! உத்தம க்ஷத்திரியகுல சர்ச்சனர்காள்!! நீடாழிசூழ் உலகின் கண்ணே குல முன்னேற்றத்துக்கு நம் பெரியோர்கள் தாய்ச் சங்கமும், பத்திரிகைகளும் வேண்டற்பாலன வென ஆராய்ந்து நாடார் மகாஜன சங்க மென ஒன்று கூட்டுவித்து பக்கபலமாக "க்ஷத்திரிய மித்திரன்" "நாடார் குல மித்திரன்" போன்ற பத்திரிகைகள் நடாத்தி அவைகளின் மூலமாககுல அபிமானம்கொண்டுகல்வி முதலியன கற்பித்து வருகின்றனர்.

மற்றும் இபர சாதனங்களுக்கு வேண்டிய தொழிற்சாலை வியாபாரஸ்தலம், பள்ளிச்சாலை, வாசகசாலை, சத்சங்கங்கள் ஆகியவைகளை ஆங்காங்கே தோன்றச் செய்ய பகிரதப் பிரயத்தனங்கள் எடுத்து அவைகளின் மூலம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் ஆகிய நாற்படிகளையடைந்து ஜென்மசாபல்ய மெய்த வழி வகைகளையும் காட்டாநிற்கின்றனர்.

இன்னும்தாய்ச் சங்கத்திற்கு ஆஸ்திகள் வேண்டற்பாலதென நினைத்து தலைக்கட்டு வரி என்னும் ஆஸ்தியை ஏற்படுத்தினர். ஆனால் அந்த ஆஸ்தி அபிமானக்குறைவால் வசூலிக்கப்படாமல் சங்கத்திற்குப்பணம்போதவில்லை. க்ஷத்திரிய மித்திரனோ தனமின்மையால்தயங்குகிறான். நாடார்குலமித்திரனோ முயற்சியாளர்களின் வசமிருப்பதால் தளர்வுறினும் அன்புக்குகந்த நண்பர்களின் தைரிய வார்த்தைகளின் மேல் உரம்பெற முயற்சித்துக் கொண்டிருக்கின்றான். ஆகையால் கனவான்களே! ஒவ்வொருவரும் பத்திரிகைகளை ஆதரித்து புதியதோர் ஊக்கம் நல்குவாம். இஃதே நாம் செய்ய வேண்டிய முதற்கடனாகும்.

நாடார் சிரோமணிகாள்! தற்போழ்து எஞ்சி நிற்கும் தலைக்கட்டு வரியைப் பட்டணங்களில் உள்ளவர்களாகிய நாமே கொடுக்கவில்லை என்றால் பட்டிகளில் உள்ளவர்களைக் குறை கூறவேண்டியதில்லை.

புண்ணிய சீலர்காள்! குலமுன்னேற்றத்தின் பொருட்டு நாம் செலவு செய்யும் தொகையில் சிறிதளவு கொடுத்து உதவி செய்வது நமக்கு ஒரு பழுவாகாதென்பது என் உள்ளக்கிடக்கை. ஆகையால் இது சமயம் சங்கத்தையும், குல பத்திரிகைகளையும் கவனித்து வேண்டுமுதவியாவதும் செய்வோமாக.

பா. வே. ச. பழனிச்சாமி,

விருதுநகர்.

---

## மதிப்புரை.

### ஆகாயவீரன்.

இச்சிறந்த செந்தமிழ் நாவல் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது.

இந்நூல் விவிலிய நூலின் கண்ணுள்ள எஸ்தர் சரித்திரத்தின் மறுபெயர்ப்பேயாகும். நாவின் சாராம்சம் நீதிமுறை அணுவளவும் பிசகாமல் தனியரசு புரிந்த ஆகாயவீரன், காமத்தால் கள்ளால் உள்ளம்வேறுகி அமைச்சர்சபை நியமித்து அரசியல் அனைத்தும் அமைச்சர்பாலொதுக்கி வாழாவிருக்க, உத்தியோக மமதைகொண்ட மந்திரிகள் தான்றோன்றியாய் தன்னயம் பேணி தேசத்தை நாசமுறச் செய்த தோடன்றி யூதர்எனும் பெரிய சனசமூகத்தை தென்னுலகனுப்பச் சித்தமாயினர், அது கண்ட அரசி,அரசன் மதிமயக்கந் தெளிய வேண்டுவன செய்து ராஜ நீதிதர்மத்தையும் கீர்த்தியையும் நிலைநாட்டி வைத்தனளென்பதே கதையின் வரலாறு.

பிறர்க்கின்னா முற்பகற்செய்யின்
[தமக்கின்னா
பிற்பகல்தானேவரும்

என்ற நீதி வாக்கியத்திற்கிணங்க முதல் மந்திரி அனுபவித்த பாகம் வாசிப்பவருள வங்தெளிய வரையப்பெற்றிருக்கிறது. பூர்வநூலின் போக்கு எவ்வாறிருப்பினும் தமிழில் மொழி பெயர்த்தவர் நாடு நகரம் வீடுமுதலிய சிறப்புக்களை தமிழ்வாணர் சம்பிரதாயப்படி சிறப்பித்திருப்பது வாசிக்க மிகவும் ருசிகரமாயிருக்கிறது. முதிர்சுளை ஈப்போல் மெய்ப்பர் சொல்நிட்பத்தாரே என்றொரு புலவர் கூறியதிற்கிணங்க தமிழ்ச்சுவையறிந்த வல்லுனர் யாவரும் நாவல் ஆக்கியோன்வாக்கிய முனைத்தையும் சுவைத்து இதயத்தில் புதைக்க வெண்ணுவரே யன்றி ஒன்றையும் ஒதுக்க வெண்ணார் என்பது திண்ணம். இந்நூல் மொழி பெயர்ப்பாசிரியர் திருநெல்வேலிஜில்லா இட்டமொழி வ. வி. யோசேப்பு ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீயான் ஜெ. ஜி. சுந்தரம் அவர்களாவர்.

வெளியிட்டது மதுரை புஸ்தக வியாபாரம் ஸ்ரீமான் இ. மா. கோபால கிருஷ்ணக் கோன் அவாகளேயாம். 230 பக்கங்கள் கொண்டது. நல்ல கிலேஸ்காகிதம் விலை அணா 12.

---

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் செவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடை பெறும்.

100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக் கூடிய அளவில் செய்யப்பட்ட

மினியேச்சர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக் கூடியது. சயிஸ் 6"–6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாகிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—

ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,

மவுண்ட் ரோடு, மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அதிஷ்டம்! அதிஷ்டம்!! முந்துங்கள் !!!

அருப்புக்கோட்டை
" நாடார்குல மித்திரன் " க்ஷேம நிதி
தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

மொத்தம் சீட்டுகள் 33000. சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-ஸ்ரீ மே மீ 4 உ க்கு பிரபவ ஸ்ரீ
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | | | |
|---|---|---|---|
| 2-வது பிரைஸ் | ரூ 1500 | 3-வது பிரைஸ் | ரூ 1000 |
| 4-வது பிரைஸ் | ரூ 500 | | |
| 200 ரூ-ல் 2-க்கு | ரூ 400 | 100 ரூ-ல் 5-க்குரூ | 500 |
| 50 ரூ-ல் 20-க்கு | ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ | 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ | 1000 | 5 ரூ-ல் 200-க்குரூ | 1000 |
| 8 ரூ-ல் 600-க்கு | ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ | 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500—க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகையறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700 பண்டுக்கு ரூ 9000
ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1—வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் சு. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இங்ஙனம்,
சு. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை.


(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாயுமிருந்தது. இப்போது நூன்றமில்லை. என் தகப்பனார் தமது வாழ்நாளில் ஒரு கோழிக் குஞ்சைக் கூடக் கொன்றது கிடையாது" என்று அவன் உரைத்தான்.

* *

இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு இன்னொருவனைக் கண்டேன். அவனும் முதலில் என் பேச்சைக் கேட்டு வியப்புற்றான். "வேறு வழியில்லையே! கொன்றுதானே ஆக வேண்டும்" என்றான் வாழ்வுக்குப் புலால் அவசியமன்றென்பதை உணர்த்திய பின்னர் அவன் கூறியதாவது:—"ஆமாம்! பாவம்! அதிலும் சாதுவான ஆடு மாடுகளைக் கொலை செய்வது பரிதாபந்தான்! மனிதனை நம்பி அவை வருகின்றன! அவைகளைக் கொல்லுதல் பரிதாபம்! இதன பயங்கரத்தைக் கவனியுங்கள். பிராணிகளின் துன்பமும், மரணமும் ஒருபுறமிருக்கட்டும். மனிதனுடைய ஆன்ம குணங்களில் மிக உயர்ந்ததான இரக்க உணர்ச்சியை அவன் அநாவசியமாக அடக்கிக் கொன்றுவிடல் என்ன பரிதாபம் பாருங்கள்! தன்னைப் போன்ற உயிர்ப் பிராணிகளிடம் இயல்பாகவே இரக்கமும் அன்பும் படைத்த மனிதன் வேண்டுமென்று அவ்வுணர்ச்சிகளைக் கொன்று குரூர சித்தனுவதைப்போன்ற கொடுமை வேறுண்டோ?

* *

மற்றொரு நாள் நான் சாலையில் நடந்து கொண்டிருந்தபோது, அவ்வழியே சென்ற போக்கு வண்டியில் ஏறிக் கொண்டேன். வண்டிக்காரன் குடி மயக்கத்திலிருந்தான். வண்டி ஒரு கிராமத்தின் வழியாகச் சென்றபோது அங்கே சன்றுக்க் கொழுத்துப் பெருத்த பன்றியொன்றைக் கொலை செய்து கொண்டிருந்தார்கள். ஒருவன் கத்தியினுல் அதன் தொண்டையில் ஓங்கிக் குத்தினுன். பன்றி பயங்கரமாகப் பெரிய சத்தம் போட்டுக் கத்திக் கொண்டே அங்கிருந்து ஓடிற்று. அதன் உடல் முழுதும் இரத்தமாயிருந்தது. ஆயினும் அவர்கள் விடவில்லை. மறுபடியும் பிடித்துக் கொண்டு வந்து கீழே தள்ளி மேலும் மேலும் குத்திக் கொன்றார்கள். குடி மயக்கத்திலிருந்த வண்டிக்காரன் "ஐயா! இத்தகைய பாதகர்களுக்கு மனிதருக்குத் தண்டனை கிடையாதென்பது உண்மைதானு?" என்று என்னைக் கேட்டான் [illegible]

யில் வெறுப்பு மனிதனுடைய ஆன்மாவில் குடி கொண்டிருக்கிறது. ஆயினும், பிறரைப் பார்த்தும், பேராசையினுலும், ஆண்டவன் அநுமதித்திருக்கிறார் என்னும் பொய் நம்பிக்கையினுலும், எல்லாவற்றிற்கும் மேலாக வழக்கத்தினுலும் ஜனங்கள் இவ்வியற்கை உணர்வை இழந்து விடுகிறார்கள்.

* *

இனிய குணமும், இரக்கமும், அன்புமுள்ள ஆடவர்களும், பெண்மணிகளும் நமது ஜன சமூகத்தில் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். ஆயினும் இவர்கள் தாங்கள் செய்வதில் சிறிதும் தவறில்லை என்னும் முழு நம்பிக்கையுடன் புலால் உண்டு வருகிறார்கள். இவர்கள் ஆடு, மாடு அடிக்கும் கொலைக்கூடம் ஒன்றுக்குச் சென்று அந்த கோரக் காட்சியைப் பார்த்தல் வேண்டும். ஆனல் இதற்கு அவர்கள் உடன்படமாட்டார்கள். சாதுவான வாயில்லாப் பிராணிகளைக் கதறக் கதறக் குத்திக் கொல்லும் மகா பயங்கரத்தைப் பார்த்தால் அவர்களில் சிலர் மூர்ச்சை போட்டு விழுந்து விடுவார்கள். ஆயினும் அப்பிராணிகளின் பிணத்தைக் கொஞ்சமும் கூசாமல் அருவருப்பில்லாமல் தின்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை. கொலைக் கூடத்துக்குச் சென்று பாராததினுல், நமக்கு அப்பிராணிகளின் துன்பம் தெரியாமலில்லை. நாம் நெருப்புக் கோழிகளல்லோம். நாம் பார்க்க விரும்பாதவற்றைப் பாராமலிருந்து விட்டால் அவை இல்லாமலே போய் விடுமென்று நினைக்கும் வண்ணம் அவ்வளவு அறிவீனர்களல்லோம். எனவே வீண் பாசாங்கு செய்வதில் பயனில்லை.

* •

அன்பும் இரக்கமும் இயல்பாக அமைந்தவன் ஒருவன் தான் செய்வது முற்றும் சரியென்னும் நிச்சயத்துடன் பிராணிகளின் மாமிசத்தைத் தின்கிறான். அவனைக் கேட்டால் முற்றும் முரண்பாடான இரண்டு விஷயங்களைக் கூறுவான். முதலாவது, மென்மையான, பலவீனமான தன் உடம்புக்கு மாமிசம் இன்றியமையாதது என்று டாக்டர் கூறியுள்ளார் என்பது. இரண்டாவது, தான் இளகியமனம் படைத்தவனுதலால் எந்த உயிர்ப் பிராணிக்கும் தீங்கு செய்ய முடியாது என்பது மட்டுமன்றி, அவற்றின் துன்பத்தைக் கண்ணுல் பார்க்கவும் சகியாது என்பது. உண்மையென்னவெனில், அவன் பலவீனமாயிருப்பதற்குக் காரணம் [illegible]

வருந்தவதேயாம். பிற பிராணிகளுக்கு அவன் தீங்கு செய்யாமலிருத்தலும் முடியாது. ஏனெனில் அவன் அவற்றைத் தின்றுகொண்டு வருகிறானே!

* *

இத்தகைய கொலை பாதகம், கொடூரம் இன்றியமையாததென்றோ, அல்லது கொஞ்சமேனும் உபயோகமானதென்றோ சொல்லக் கூடுமானுலும் பாதகமில்லை. ஆனல் இதுவோ முற்றும் அநாவசியமானது. காமக் குரோத உணர்ச்சிகளைக் கிளப்புவதற்கும், விபசாரம், குடி முதலியவற்றைப் பெருக்குவதற்கும் புலால் உணவு பயன் படுகிறதே யன்றி வேறில்லை. ஆகவே, நான் சொல்வதென்ன? சன்மார்க்கத்துக்காகப் புலால் உணவை விட்டு விட வேண்டுமென்றா? ஒருகாலுமில்லை. புலால் உணவை விட்டு விட்டதாலேயே மனிதர்கள் சன்மார்க்கர்களாக ஆகிவிட முடியாது. பின்னர் என் கருத்தென்ன? இதுகாறும் நான் கூறியவற்றை இங்கே சுருக்கமாய் எடுத்துரைத்து என் கருத்தை விளக்குகிறேன்:—ஒருவன் நல்வாழ்க்கை நடத்த உண்மையிலேயே உறுதி கொண்டவனுயிருந்தால் வரிசைக் கிரமமாகச் சில நற்குணங்களைப் பெறுதல் இன்றியமையாதது. இக்குணங்களுள் முதன்மையானது புலனடக்கமாகும். இனி புலனடக்கம் பெற விரும்புவோனும் வரிசைக் கிரமமாகச் சில படிகளைக் கடந்து செல்லுதல் வேண்டும். இப்படிகளில் முதலாவது சுவைப் புலனடக்கம். அதாவது உபவாசநெறி. இனி, உண்மையிலேயே நல்வாழ்வு நடத்த விரும்பும் ஒருவன் அவ்வாழ்வுக்கு இன்றியமையாத முதல் நிபந்தனையான புலனடக்கத்தில் வெற்றிபெற உறுதிகொண்டு, அப்புலனடக்கத்தில் முதற்படியான உபவாச நெறியில் நிற்க விரும்பினுல், அவன் முதன்மையாகச் செய்ய வேண்டிய காரியம் புலால் மறுத்தலேயாம். ஏனெனில் புலால் உணவு மனிதனுடைய தீய உணர்ச்சிகளை எழுப்பி விடுவது ஒருபுறமிருக்க, அது சன்மார்க்கத்துக்கு முற்றும் மாறுபட்டது; துன்மார்க்கமானது. ஏனெனில் பாதகங்களுள் முதன்மையான கொலைக்கு அது காரணமாயிருக்கிறது. பெருந்தீண்டியில் ஆசையே யன்றி அதற்கு வேறு அவசியமும் கிடையாது. ஒரு மாளிகையின் மேல்மாடியை அடைய விரும்பும் ஒருவன், எவ்வளவு தான் சுற்றிச்சுற்றி வந்து சுவர்களின் மீது ஏறமுயன்றாலும் கடைசியில் மாடிப்படிக்குவந்து முதற்படியேறுமல் மேல்மாடிக்குச் செல்ல எப்படி முடியாதோ அவ்வாறே இவ்வுலக வாழ்க்கையென்னும் மாளிகையில், நல்வாழ்வு என்னும் மேல்மாடியை யடைய விரும்புவன் ஒருவன், வரிசைக் கிரமமான நற்குணங்கள் என்னும் மாடிப்படிகள் இருப்பதை யுணர்ந்து அவற்றுள் முதற்படியான புலால் மறுத்தலைக் கைக்கொண்டாலன்றி அவன் நல்வாழ்வை யடைய முடியாதென்பது சத்தியம்.

"நவசக்தி"


முந்துங்கள்! முந்துங்கள்!! சில பிரதிகளே கைவசமிருக்கின்றன.

என் ஏழைச் சகோதரர்களே! ஏன் கவலைப்படுகின்றீர்கள்?

50 ரூபாய் முதல் 500 ரூபாய்வரை மாதம் சம்பாதிக்கலாம்.

## கைத்தொழில் வணிக இரகஸ்யம்.

இதில் சோப்புகள், மெழுகுவர்த்தி, நெருப்புக்குச்சி, பெய்பர் மெண்ட், பிஸ்கத், கேக்குகள், வாசனை எண்ணெய்கள், சசம் பிராணிவர்த்திகள், பன்னீர், சாபத்துகள், இங்கி, பூட் பாலீஷ், வார்னிஷ், சாயங்கள், பலவித மருந்துகள், காகிதம், பென்சல் முதலியவைகள் செய்யும் முறைகளுடன் 200 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் ரூ 1–8–0. உடனே எழுதுங்கள். எல்லாவிதமான தமிழ் புஸ்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

ஜயலக்ஷ்மி புஸ்தகசாலை,
64, வெங்கிடமேஸ்திரி வீதி, மண்ணடி, மதராஸ்.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection